# செய்யுட் கதைக் கொத்து

## முதற் பகுதி

(அரும்பத விளக்கவுரையுடன்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-MAY 1927
MADRAS

சென்னை-புரசை C. R. C. ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
**சு. வேங்கடராம சாஸ்திரிகள்**
தொகுத்தது.

2420
894.811

சென்னை:
இந்தியா பிரிண்டிங் வர்க்ஸ் அச்சுக்கூடத்தில்
பதிக்கப்பட்டது.

காபிரைட்] 1927.    [விலை அணா 4.

# முன்னுரை

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

அமிழ்தினுமினிய நம் தமிழ் மொழியின்கண் மாணவர்கட்கு ஆர்வம் அதிகரிக்குமாறு வித்தியா சாலைகளில் பலவகைப்பட்ட செய்யுட் பாடப் புத்தகங்கள் உபயோகப் பட்டு வருகின்றன. ஆனால் அவற்றுள் மிகப்பல கதைப் போக்கைத் தழுவாதிருத்தல் வெளிப்படை.

இக்குறையை நீக்கக்கருதி முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவர்கட்கு உபயோகப் படுமாறு பல நூல்களினின்றும் தக்க பகுதிகளைத் தேர்ந்தெடுத்து 'செய்யுட் கதைக்கொத்து' என்னும் பெயரிய செய்யுட் பாடப் புத்தக வரிசையொன்றை யான் திரட்டியுள்ளேன். அதன் முதற் பகுதியாகிய இதில் ஒன்பது மலர்கள் அடங்கியிருக்கின்றன. இதிலுள்ள ஒவ்வொரு கதையும் மாணவர் படித்தற்கு இன்றியமையாதனவென்பது, இதன் பொருளடக்கத்தை நோக்குவார்க்கு எளிதிற்புலப்படும். படிப்பவர்களுக்குப் பொருள் இனிது விளங்குமாறு வேண்டியவளவு செய்யுட்களிலமைந்துள்ள கதை விவரங்களோடு கூடிய அரும்பத விளக்கவுரையும் எழுதிச்சேர்க்கப் பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தை அச்சுவாகனத்தேற்றி வெளிப்படுத்துவதற்கு வேண்டிய பொருளுதவி புரிந்த திருச்சிராப்பள்ளி ஜில்லா, துறையூர்ப் பிர்க்கா, பெருமாள் பாளையம், ஸ்ரீமான் செ. மூ. பெரியண்ண பிள்ளை அவர்களது பெருந்தகைமை ஒருபோதும் மறக்கற்பாலதன்று.

இப்புத்தகத்தை வித்தியாபிவிருத்தி அதிகாரிகளும் கலாசாலையதிகாரிகளும் பெரிதும் கவனித்து அபிமானித்து வித்தியாசாலைகளில் பாடமாக வைப்பார்களென்று நம்பியிருக்கின்றேன்.

சென்னை,
1—4—1927.

சு. வே.

# பொருளடக்கம்

| மலர். | விஷயம். | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | இராமரது இளமைப் பருவம் | .... | 1 |
| 2. | அரிச்சந்திரன் தன் நகர் நீங்குதல் | .... | 3 |
| 3. | ஒட்டகமும் காகமும் | .... | 8 |
| 4. | மனுநீதி கண்ட சோழன் | .... | 11 |
| 5. | நளன் தூது செல்லல் | .... | 15 |
| 6. | பாம்பும் தவளைகளும் | .... | 20 |
| 7. | அரிச்சந்திரன் விலைப்படுதல் | .... | 22 |
| 8. | குசேலர் கிருஷ்ணனைப் பார்க்கப் புறப்படுதல் | | 26 |
| 9. | கஜேந்திர மோட்சம் | .... | 33 |
| | அரும்பத விளக்கவுரை | .... | 37—56 |

## பிழை திருத்தம்.

| பக்கம் | செய்யுள் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2. | 11 | விணயம | விணயம் |
| ,, | 12 | தெளளமிழ்தம | தெள்ளமிழ்தம் |
| 5. | 7 | திரைகடலுட் | திரைக்கடலுட் |
| 13. | 12 | தெழித் தொழு | தெழித்தெழு |
| 32. | 30 | தெடுதுத் | தெடுத்துத் |

# செய்யுட் கதைக் கொத்து.

## மலர். 1

### இராமரது இளமைப்பருவம்.

நாடு கோசல நாடுமா நதிபுனற் சரயு
ஆடு திண்கொடி யயோத்திமா நகரதற் கிறைவன்
தேடு வண்புகழ்த் தசரதன் றேவியர் முதன்மை
சூடு கோசலை கைகேசி சுமித்திரை யென்பார். 1

மற்றுந் தேவிய ரறுபதி னாயிர மடவார்
சொற்ற மன்னவன் சுடர்புகழ் வேள்வியைத் தொடங்கிப்
பெற்ற மைந்தர்பேர் பிறங்குவே லிராகவன் பரதன்
எற்று நீள்புயத் திலக்குவன் சத்துருக் கினனே. 2

அன்ன மன்னவ னரியணை மீதுவீற் றிருந்தான்
இன்ன மாநிலம் படைப்பெனென் றவனியல் வேள்விக்
குன்னன் மைந்தரி லிராமனைத் தருதியென் றுரைத்தான்
மன்னர் மன்னவன் மறுத்தனன் வசிட்டனீ துரைத்தான். 3

மறுத்தி யன்றென வுரைத்தலு மன்னர்கோன் முனியைப்
பொறுத்தி யென்றவன் பொன்னடி சென்னியிற் புனையா
உறுத்தி மைந்தரை யளித்தலு முவந்துமா முனியும்
கறுத்த செம்மலுந் தம்பியுங் காடுசென் றடைந்தார். 4

காமன் மாறுபட் டுலந்ததோர் காடுகண் டேகித்
தாம வார்குழற் றாடகை படச்சரந் தூண்டி
ஏம மாகிய படைக்கலம் யர்வையு மெய்தி
ஓம மாவவி யுறைந்ததோ ருறையுள்சென் றுறைந்தார். 5

வெவ்வி லிச்சின வீரரைக் காக்கென விடுத்தே
அவ்வி டத்துமா முனிவனும் வேள்வியை யமைக்க
எவ்வி டத்தினு மரக்கர்வந் திடியென வார்த்தார்
வவ்வி டச்சர மாரியால் வானத்தை மறைத்தார். 6

கண்ட வீரனு மரக்கரைக் கடிந்து தாடகையாம்
சண்ட வேகத்த டனையரி லொருவனைச் சரத்தால்
துண்ட மாக்கிமற் றொருவனைக் கடல்புகத் துரந்தான்
மண்டு வேள்விசெய் முனிவனு மதுகண்டு மகிழ்ந்தான். 7

கண்ட மாமறை முனிவனுந் தம்பியுந் தானும்
கண்டல் சூழ்கரைக் கங்கையுங் கானமுங் கடந்து
பண்டை மாநிற மகலிகை பெறப்பணித் தருளி
விண்டொ டும்மதின் மிதிலைமா நகரின்மே வினரால். 8

சனகர் கோனைவந் தணுகலுந் தழல்புரி வேள்வி
முனிவ விங்கிவ ராரெனக் கருளென மொழிந்தான்
வினையம் வேறிலை விறல்புனை தசரத னென்பான்
தனையர் மற்றுநின் றனுவலி காண்குறச் சமைந்தார். 9

இந்திர வில்லென யாரு மியம்ப
வந்த நெடுஞ்சிலை வள்ளல் வளைத்தான்
அந்தர வானி லரம்பைய ரார்த்தார்
தந்தை யுகந்திடச் சார்ந்திடு மன்றே. 10

சனக னலந்திகழ் தசரத னுக்கோர்
துனியறு மோலையைத் தூதொடு மேவத்
தனைய ரொடுங்கிளர் தவமுனி யோடும்
வினையம வலான்மதின் மிதிலை யடைந்தான். 11

தௌள மிழ்தமபுரை சீதையை யன்பால்
வள்ளலி ராமன் மகிழ்ந்து மணந்தான்
முள்ளில வெயிறிதழ் மூவரை யும்போர்
வெள்ளிலை வேலவர் மூவரும் வேட்டார். 12

அந்நகர் தன்னை யகன்றன ரிப்பால்
மன்னு மழுப்படை யான்சிலை வாங்கி
அன்னவனைத்தவ மார விடுத்தே
பொன்னணி மாட் வயோத்தி புகுந்தார். 13

உத்தரகாண்டம்—ஒட்டக்கூத்தர்.

## மலர். 2

### அரிச்சந்திரன் தன் நகர் நீங்குதல்.

தலமுழுதுந் தவமுனிவன் றனக்களித்தே மினியுறைத
றகுதி யன்றென்
றிலகுமணி மண்டபமு மெழின்மணிச்சிங் காதனமு
மிழிந்து போந்து
பலவரச ருடனமைச்ச ருழுதுடன்போய்ப் பரதவிக்கப்
பதாதி மொய்க்கக்
குலமகனு மடமயிலு முன்னடக்கப் பின்னடந்தான்
கொற்ற வேந்தன். 1

தொடைதுறந்து முடிதுறந்து பணிதுறந்து துடிமுரசந்
துறந்து தார்மக்
குடைதுறந்துவெண்கவரிக் குழாந்துறந்து கரிபரிதேர்க்
குலந்து றந்து
கடைதுறந்து மறுகணைந்த காவலன்றன் றிருமுகத்தைக்
கண்டோ ரெல்லாம்
அடையமன மழிந்துருகி யவரவரே முகத்திலறைந்
தழுவா ரானர். 2

மயிரோடுஞ் சிறையிழந்த போகில்போல் வேலியொடு
வரம்பி ழந்த
பயிரேபோற் கரமிழந்த கரியேபோற் பொறியிழந்த
பாவை யேபோல்
உயிரேபோய்ப் பரதவிக்கு முடலேபோன் மூத்தாலுள்
ளுடைந்த லம்பும்
தயிரேபோற் றளர்ந்தலைந்து தத்தமக்கு நிகழ்ந்தவெலாஞ்
சாற்ற லுற்றார். 3

# செய்யுட் கதைக் கொத்து

கொண்டிருந்த வளநாடுங் குறையாத பெருந்திருவுங்
கொடித்திண் டேரும்
பண்டிருந்த மாளிகையும் பரிசனமுந் தமக்களித்துப்
பாலனோடும்
வண்டிருந்த தாரானும் வாணுதலும் வறியோர்போல்
வனத்தே போகக்
கண்டிருந்தும் விலக்காத கௌசிகனார் தம்மனமுங்
கல்லோ வென்பார். 4

என்றலமந் தனைவோரும் வயிறலைத்து விழுந்தேங்கி
யிரங்குங் காலை
கன்றினொடும் பிடியினொடுங் கிளையினொடும் வனம்புகுதுங்
களிறே போல
இன்றளித்த தருண்முனிவர்க் கேற்றனவோ வேற்றிலவோ
வென்ன வேங்கிக்
குன்றனைய மதில்கடந்தே தனிநடந்து சரையுவினைக்
குறுகினனே. 5

உரைபெறுசீ ரிரவிகுலத் தரசர்க்கு வழிவழியே
யுரிமை யாய
சரையுவெனுந் தாதியரிச் சந்திரற்கு வந்தவினை
தானே தென்ன
விரைமலர்த்தாள் பூண்டுகிடந் தரற்றிடவு மிழிந்தேகி
விரைந்து போய்மேல்
கரையணுகி வரிமணலில் விரிமலர்கள் சொரியுநறுங்
காவிற் புக்கான். 6

வரைக்கனக புயத்தினனம் மலர்க்காவில் வரிமணன்மேல்
வந்திருந்தான்
விரைக்கரும்பூங் குழலாளுந் திருமகனு மிருபாலும்
வீற்றிருந்தார்

திரைகடலுட் பொருளெனப்போய்ச் செங்கதிரோன்
சென்றனனச் சென்ற காலை
உரைப்பனவும் விளைப்பனவு மறிதுமெனு முனிவனும்வந்
தொளித்தி ருந்தான். 7

அக்காலத் தமைச்சரெலா மடல்வேந்த னடிபோற்றி
யரசே நீமீண்
டெக்கால மெழுந்தருள்வ தென்றுரைக்க வாங்கவரை
யிருக ணோக்கி
முக்காலங் களுமுணரு முனிவனுக்கின் றியான்கொடுத்த
மூதூர் தன்னில்
எக்கால மும்வருவ தில்லையென்று னமைச்சரெலா
மேங்கி வீழ்ந்தார். 8

சடைபிடித்துங் கரம்பிடித்துந் தாள்பிடித்து மரவுரியாற்
றகைந்து டுத்த
உடைபிடித்து மீர்த்தவனை யுயர்வனத்தி லிப்பொழுதே
யோட்டு கின்றோம்
மடைபிடித்த வயல்சூழும் வளநாடு நீபுரக்க
வருவா யென்று
படைபிடித்த மலர்க்கரத்தாற் பதம்பிடித்து விறல்வேந்தர்
பணிந்து வீழ்ந்தார். 9

படிபுரக்கு மன்னவன்கேட் டிருகரத்தாற் செவிபுதைத்துப்
பாவ மந்தோ
குடிகெடினு முயிர்கெடினுங் கொடுத்ததுவாங் கேனென்று
கூறு மெல்லை
கடிபொழிலிற் காத்திருந்த கௌசிகனும் வந்தெதிர்ந்தான்
கண்ட போதே
அடியிணைதன் முடிசாத்தி யிருகரத்தா லுறப்பூண்டா
னரசர் கோமான். 10

வெய்தாநீ வேடுவரால் விலங்கனைத்துங் கொல்வித்தாய்
வெகுண்டே னத்தை
எய்தாயென் மக்களையு மிசைகேட்டுத் துரத்தடித்தா
யின்று மென்னை
வைதாய்நீ யெனக்களித்த மண்டலத்தை யான்றரநீ
வாங்கா யாகில்
செய்தாயின் றிவருரைத்த தீமையெல்லா மென்னமுனி
செப்பி னானே. 11

சிறுத்தவர்க ளறியாமற் செய்தபிழை யத்தனையுஞ்
செவ்வி யோய்நீ
பொறுத்தருளா யாமாகிற்பொறையென்னும்முறையென்னும்
புலமை யென்னும்
ஒறுத்திடினும் வெறுத்திடினு முனக்களித்த வரசுரிமை
யொருகா லத்தும்
மறுத்தினியான் வாங்கேனென் றெடுத்துரைத்தான்
மன்னன்முனி வாட்ட முற்றான். 12

பொன்கேட்கப்பொன்னளித்தான்புவிகேட்கப்புவியளித்தான்
போதா தென்னா
என்கேட்கி னுந்தருவ தில்லையெனும் புன்மையிவ
னிடத்தி லில்லை
முன்கேட்ட பொருளாலே மொழிவழுவந் தெய்துமது
முடக்க மானால்
பின்கேட்டா ரிகழ்வார்கள் யாம்பொறுத்து மெனநினைந்து
பேச லுற்றான். 13

ஒன்றுரைக்க் நீகேளா யுண்மைக்கும் வண்மைக்கு
முரியோ யென்னை
இன்றுரைத்த பிழைபொறுத்தே னழல்வேள்வி முடித்திடுதற்
கீவே னென்றங்

கன்றுரைத்த பொருளதனை யளிப்பாயோ வளியாயோ
வரச வென்றான்
என்றுரைத்த கௌசிகனை யடிதொழுது வாய்புதைத்தாங்
கிது ரைப்பான். 14

உன்னுடனே யுரைத்தபொரு ளுனக்கடியே னுகந்தளித்த
வுரிமைச் செல்வம்
தன்னுடனே போனதென வுணர்ந்தேனு மினுமுனிவாற்
றருவ லென்றே
நின்னுடனே யானுரைத்த சபதமினி மாறுவனோ
நீயாள் விட்டால்
பொன்னுடனே தருவனென்றான் புகரோனை யவனழைத்துப்
பொருத்தி னானே. 15

உள்ளியதீ வினையனைத்துக் தனித்திருத்தி வகைவகையே
யுரைத்து நீபோய்
அள்ளியிடும் பொருள்கவரா தானையின்மேற் கவண்சிலைபோ
மளவு தந்தால்
கொள்ளுதிநீ பின்போன கூலியையும் பெறுதியெனக்
கூறித் தீய
வெள்ளிதனை யுடன்கூட்டி மீண்டுமழைத் தொருவாய்மை
விளம்ப லுற்றான். 16

அடுத்திருத்தி மனங்கலக்கி முனிக்களித்த மொழிமாறி
யளியே னென்னா
எடுத்துரைக்கி லுன்னரசை யான்வாங்கித் தருவேனென்
னிசைந்தா னாகில்
தடுத்தழைத்து வருதிநமக் கதுபோது மெனப்பலவுஞ்
சாற்றிக் கூட்டி
விடுத்தனன்விட் டரசனுக்கு விடைகொடுத்து மாமுனிவன்
மீண்டு போனான். 17

முனியேக மன்னவனு மூரிநெடுஞ் சேனைதனை
முனிவன் றன்னே
டினியேகு மவற்கினியா ரெனக்கினியா ரெனவழுதங்
கியாரு மீண்டார்
பனியேகு முனமெழுந்து பைந்தொடியு மன்னவனும்
பாலன் றானும்
தனியேகக் கண்டமைச்சன் சத்தியகீர்த் தியுமவர்க
டம்பிற் சென்றான். 18

**அரிச்சந்திரபுராணம்.—வீரகவிராயர்.**

—:o:—

## மலர். 3.

## ஓட்டகமும் காகமும்.

துட்ட நண்பு தொடங்கினல் லோர்களும்
நட்ட மெய்துவர் நன்மை யவர்க்கிலை
இட்ட மாக விருந்தொரு காக்கையோர்
ஒட்ட கத்தி னுயிரை யழித்ததே. 1

உரைசெ யக்கதை யென்றொரு தோதலும்
இருள்செய் காட்டின் மதோற் கடனென்னுமோர்
அரசு சிங்க மதற்குள மந்திரி
நரியும் வேங்கையுங் காக்கையு நண்ணுநாள். 2

ஒட்ட கம்வழி தப்பியக் குற்றிடக்
கிட்டி வாயச மாரெனக் கேட்டலும்
ஒட்டை யுண்மை யுரைத்திட வாணையும்
இட்டு வாயசந் தானழைத் தேகியே. 3

மன்ன னை மதோற்கடன் முன்விட
அன்ன வேந்த னப்பயங் கொடுத்துநீ
இன்ன லின்றிமந் தானக னென்றுபேர்
மன்னி மந்திரி மாரொடு வாழ்கென. 4

சம்பு வும்புலி யுங்கொடி யும்மெமை
கம்பு கென்று சொலிச்சில நாளெலாம்
தம்பு லத்திற் சகோதர ராமென
இம்பர் போற்ற விருந்துடன் வாழ்ந்தவே. 5

உரைசெய் சிங்க மொருதின நோய்கொடு
விரைசெய் வேட்டையின் மேற்செல வேறிருந்
திரைசெய் வேட்கையை யெய்தி யமைச்சரைப்
புரைசெ யன்பொடு நோக்கிப் புகலுமால். 6

பொங்கு வெம்பசி யேற்கிரை போய்க்கொணர்ந்
திங்கு நல்குமி னென்றுரை செய்திட
அங்கு நான்கு மடவியெ லாந்திரிந்
தெங்கு மில்லை யிரையென வந்தவே. 7

உற்ற நான்கினி லொட்டக மொன்றலான்
மற்றி ரண்டையும் வம்மின்க ளென்றுதான்
கற்ற பாடையிற் காக மழைத்துப்போய்க்
கொற்ற வேந்தன் சமுகங் குறுகியே. 8

மன்ன னேயிவ் வனங்களெ லாந்திரிந்
தின்ன லுற்று மிரையொன்று மில்லையால்
உன்ன ருட்கொடு போய்ப்பிழைப் போமென
முன்னி வந்தன மென்று மொழியவே. 9

யாது நுங்கருத் தென்றுசிங் கஞ்சொலக்
கோதில் வேந்தமந் தானகற் கொன்றிடில்
போது மென்று புகலச் சிவசிவா
ஈது பாவ மெனச்செவி மூடவே. 10

வாய சமது கண்டடன் மன்னகேள்
ஆய மன்னவர் செய்கையி தாகுமி
யாய மென்று! நவில்குவன் யான்முனம்
மாய வன்சொலும் வாய்மையிவ் வாறரோ. 11

ஒருவ னைக்கெடுத் தோர்குடி காக்கலாம்
ஒருகு டிகெடுத் தோர்நகர் காக்கலாம்
ஒருந கர்கெடுத் தோர்பெரு நாடெலாம்
ஒருபெ ருந்துன் புறுவகை காக்கலாம். 12

என்று பஞ்ச வர்முன் னரியம்பவே
நன்றி தென்றவர் நன்மகன் றன்னையும்
கொன்று நின்று களப்பலி கூட்டியே
வென்றி யெய்தின ரென்று விளம்பவே. 13

அபயம் வாங்கி யடைக்கலம் புக்கதை
அபய மாற்றி யழிப்பர்க ளோவென
அபய மீந்தவுன் னாலழி யாமலுன்
அபயங் காத்தத னாலதைக் கொல்வமால். 14

என்று காக மியம்ப மதோற்கடன்
ஒன்று முத்தர மோதில னாலதை
நன்றி தென்ன நயந்தநெஞ் சொட்டகம்
நின்ற தோரிட நேடிவந் துற்றதே. 15

அரசன் வெம்பசி யால்வருந் துற்றனன்
இரைமற் றியாது மினிக்கிடை யாதுநாம்
உரைசெய் வோமென நான்கு மொருமையாய்
அரசன் முன்சென் றடிகள் வணங்கியே. 16

மன்ன னேயிவ் வனத்தி லிரையிலை
என்னை நீகொன் றிரையருந் தென்றுமுன்
சொன்ன காகத்தை நோக்கி மதோற்கடன்
என்ன நின்னுடல் சின்னதென் றேசொல. 17

ஆயி னென்னை யருந்தெனச் சொன்னகோ
மாயு வோதவவ் வாறு மறுத்திடப்
பாயும் வெம்புலி தன்னைப் பருகென
நீயு மெற்கு நிரம்பிரை யோவென. 18

கதன கன்னிதைக் கண்டு நமைக்கொல
விதனம் வைத்தன ரென்று விரைந்துநான்
அதிக னென்னை யருந்தெனச் சொல்லுமுன்
பதறி வெம்புலி பாய்ந்திட மாய்ந்ததே. 19

சிங்க மெண்ணி யருந்திசெந் நீருணத்
துங்க வெம்புலி மூளையைத் துய்த்திட
எங்கள் சம்புக னீரல் விருந்துணத்
தங்கு காகந் தசைக ளயின்றதே. 20

கொடிய ரோடெவர் கூடினு மாங்கவர்
மடிவர் திண்ணமிவ் வாறென்று சொல்லுவார்
கொடிய வேந்தர் கையிற்கொலை யுண்ணலின்
நெடிய போரி லுயிர்விட னீதியே. 21

பஞ்சதந்திரம்.

## மலர். 4.

## மனுநீதி கண்ட சோழன்.

நிலம கட்கழ கார்தரு நீணுதல்
திலக மொப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் டாமரை போன்மலர்ந்
தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால். 1

அன்ன தொன்னக ருக்கர சாயினன்
துன்னும் வெங்கதி ரோன்வழித் தோன்றினன்
மன்னு சீரந பாயன் வழிமுதல்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே. 2

கொற்ற வாழி குவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்ற நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியுந் தன்பெய ராக்கினன். 3

அறம்பொரு ளின்ப மான வறநெறி வழாமற் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற வையகங் காக்கு நாளில்
சிறந்தநற் றவத்தாற் றேவி திருமணி வயிற்றின் மைந்தன்
பிறந்தன னுலகம் போற்றப் பேரரிக் குருளை யன்னான். 4

அளவிறல் கலைகண் முற்றி யரும்பெறற் றந்தை மிக்க
உளமகிழ் காதல்கூர வோங்கிய குணத்தா னீடி
இளவர சென்னுந் தன்மை யெய்துதற் கணிய னாகி
வளரிளம் பரிதி போன்று வாழுநா ளொருநாண் மைந்தன். 5

திங்கள்வெண் கவிகை மன்னன் திருவளர் கோயி னின்று
மங்குறோய் மாட வீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமங் குலவு தோளான்
பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்தான் 6

தனிப்பெருந் தருமந் தானோர் தயாவின்றித் தானே மன்னன்
பணிப்பில்சிந் தையி னுண்மைப் பான்மைசோ தித்தா லென்ன
மனித்தர்தன் வரவு காணா வண்ணமோர் வண்ண நல்லான்
புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்ததம் மறுகி னூடே. 7

அம்புனிற் றாவின் கன்றோ ரபாயத்தி னூடு போகிச்
செம்பொனின்றேர்க்கான் மீதுவிசையினாற்செல்லப் பட்டங்
கும்பரி னடையக் கண்டங் குருகுதா யலமந் தோடி
வெம்பிடு மலறுஞ் சோரு மெய்ந்நடுக் குற்று வீழும். 8

மற்றது கண்டு மைந்தன் வந்ததிங் கபாய மென்று
சொற்றடு மாறி நெஞ்சிற் றுயருழந் தறிவ ழிந்து
பெற்றமுங் கன்று மின்றெ னுணர்வெனும் பெருமை மாளச்
செற்றவென் செய்கை யென்றுதேரினின் றிழிந்துவீழ்ந்தான்.

வந்தவிப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த வாற்றா லாற்றுவ தறனே யாகில்
எந்தையீ தறியா முன்ன மியற்றுவ னென்று மைந்தன்
சிந்தைவெந் துயரந்தீர்ப்பான் றிருமறையவர்முன்சென்றான் 10

தன்னுயிர்க்கன்று வீயத் தளர்ந்தவா தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினிற் கண்ணீர் வார
மன்னுயிர்காக்குஞ்செங்கோன்மனுவின்பொற்கோயில் வாயில்
பொன்னணிமணியைச்சென்றுகோட்டினாற்புடைத்ததன்றே.

பழிப்பறை முழக்கோ வார்க்கும்பாவத்தினொலியோவேந்தன்
வழித்திரு மைந்த னுவி கொளவரு மறலி யூர்திக்
கழுத்தணிமணியினார்ப்போவென்னத்தன்கடைமுன்கேளாத்
தெழித்தொழு மோசை மன்னன் செவிப்புலம் புக்கபோது.

மன்னவ னதனைக் கேளா வருந்தியப் பசுவை நோக்கி
என்னிதற் குற்ற தென்றென் றமைச்சரை யிகழ்ந்து நோக்க
முன்னுற வறிந்த வெல்லா மறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறி யமைச்சன் மன்னன் றாளிணை தொழுது
[சொல்வான். 13

வளவநின் புதல்வ னாங்கோர் மணிநெடுந் தேர்மே லேறி
அளவிறேர்த் தானை சூழ வரசுலாந் தெருவிற் போங்கால்
இளையவான் கன்றுதேர்க்கா லிடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறு மித்தாய்வந்து விளைத்ததித் தன்மை யென்றான். 14

அவ்வுரை கேட்ட வேந்த னாவுறு துயர மெய்தி
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல் வேதனை யகத்துமிக்கிங்
கிவ்வினை விளைந்த வாறென் றிடருறு மிரங்கு மேங்கும்
செவ்விதென்செங்கோலென்னுந்தெருமருந்தெளியுந்தேறான்

மந்திரிக ளதுகண்டு மன்னவனை யடிவணங்கிச்
சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால்
கொந்தலர்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்த லறமென்றார். 16

மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ. 17

என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள்செயவிசைந்தேன்
அன்னியனே ருயிர்கொன்று லவனைக்கொல் வேனானல்[ த்தை
தொன்மனுநூற் றொடைமனுவாற் றுடைப்புண்ட தெனும்வார்
மன்னுலகிற் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்றான். 18

எனமொழிந்து மற்றிதனுக் கினியிதுவே செயலிவ்வான்
மனமழியுந் துயரகற்ற மாட்டாதேன் வருந்துமிது
தனதுறுபே ரிடர்யானுந் தாங்குவதே கருமமென
அனகனரும் பொருடுணிந்தா னமைச்சருமஞ் சினரகன்றார்.

மன்னவன்றன் மைந்தனையங் கழைத்தொருமந் திரிதன்னை
முன்னிவனை யவ்வீதி முரண்டேர்க்கா லூர்கவென
அன்னவனு மதுசெய்யா தகன்றுதன்னு ருயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான் 20

ஒருமைந்தன் றன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான். 21

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூமழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்க டொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான். 22

அந்நிலையே யுயிர்பிரிந்த வான்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்று மந்திரியு முடனெழலும்
இன்னபரி சானனென் றறிந்திலன்வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளுளதோ. 23

பெரியபுராணம்.—சேக்கிழார்.

—:o:—

# மலர். 5.

## நளன் தூது செல்லல்

உன்னுழை வேண்டுவ தொன்றுண் டாங்கது
பின்னர்யாங் கூறுது மென்று பெட்புறும்
பொன்னகர்க் கிறையவ னிருந்த போதினின்
மன்னவ னவரடி வணங்கி னனரோ. 1

குறிப்பறிந் தீதலே கொடைமற் றின்றென
மறுத்தலே கேட்டபின் வழங்க லாதலின்
பெறற்கரு மாவியும் பெட்பி னீகுவன்
திறப்பட விவ்வருளந் தெரிந்த தில்லையால். 2

என்றுமற் றினையன வெண்ணி வண்ணவான்
குன்றெனப் பணைத்துயர் குவவுத் தோளினன்
வன்றிறல் வாசவன் வதன நோக்கிமற்
றென்றுநீ கேட்டியென் றுரைத்தன் மேயினன். 3

என்னருந் தவத்தினன் றெனது தொல்குல
முன்னையோ ரருந்தவ முயன்ற பான்மையால்
பொன்னகர் துறந்துநீ போதப் பெற்றனன்
சொன்னவை மறுக்கிலன் சொல்க வென்றனன். 4

ஆங்கது கேட்டவா னரசன் பொற்பினால்
வீங்குதோண் மாரனை வென்ற நீயலால்
யாங்குள ரவன்றொடுத் தெய்யு மின்னருப்
பூங்கணை யால்வருந் துயரம் போக்குவார். 5

வெயில்விரி மணிமுடி வீம னல்கிய
மயிலியன் மதர்விழி வளைக்கை மங்கைபால்
செயிரறு தூதுநீ செல்ல வேண்டுமென்
றுயிரிரப் போரினு முளையக் கூறினன். 6

எப்பொரு ளாயினும் யாவ ருள்ளமும்
கைப்படு நெல்லியங் கனியிற் காணுநீ
துப்பிதழ் மடந்தைபாற் றூது போகெனச்
செப்பிய தேவன் கொலெஞ் சிந்தை யோர்ந்துமே. 7

வழங்கிய நம்முரை மறுத்து சென்றியான்
மொழிந்தன னயினு முன்ன ரேயென
விழைந்தவத் தளிரியல் வெள்கு றுதுளம்
குழைந்து நம் பான்மணம் பொருந்தல் கூடுமோ. 8

என்னவேந் துறைத்தலு மிசைத்த சொன்மறு
நின்னைமெய்ப் பரதனை நிகரில் பார்த்தனை
முன்னினு நினைத்தவை யனைத்து முற்றுமால்
அன்னநீ யேகிலே தரிய தாகுமே. 9

இனையன வாசவ னியம்பு மெல்லையின்
வனைமலர்க் கோதைதன் வயத்த னாகியும்
தனியற னிழுக்குறுத் தகைய னாதலின்
அனையதற் கியைந்தன னலங்கல் வேலினான். 10

விட்புலந் தனிபுரந் தருளும் வேந்தர்கோன்
நட்பொடு மினியன நவின்று யாவர்க்கும்
கட்புலனாலுருக் காண்கி லாததோர்
நுட்பநூல் விஞ்சையை நுவன்றிட் டானரோ. 11

பெறலரும் விஞ்சையும் பெற்று வானவர்க்
கிறையவ னிணையடி யிறைஞ்சி வண்டிமிர்
நறைமலர்க் கூந்தலா ணகரி நண்ணுவான்
அறைகழ லிலங்குதா ளரச னேகினான். 12

பாணிகர் வண்டினம் பாடுஞ் சோலையும்
சேணுற நிவந்தசெய் குன்றுந் தேடியும்
காணல னாகிய களிநல் யானையான்
மாணிழை யுறைதரு மாட மெய்தினான். 13

மின்னிடை யீரம்பையர் குழாத்துண் மேவிய
அன்னமென் னடையயி ராணி யாமென
நன்னுதல் மடந்தைமார் நாப்ப ணின்னகைக்
கன்னிவீற் றிருந்தல்கண் களிப்ப நோக்கினான். 14

குடைந்தவுண் டிமிருஞ் செய்ய கொழுமலர்த் திருவி னோடும்
தடஞ்சினை பொதுளு மென்பூந் தருநிழ லுறையுந் தெய்வ
மடந்தையர் தம்மை யெல்லாம் வைகலும்படைத்துச்செங்கை
படிந்தபி னிந்த மாதைப் படைத்தனன் கமலத் தோனே. 15

இன்னவா றுளத்தி னெண்ணி யெறுழ்வலி மடங்க லன்னான்
மின்னவிர் குலிச வேந்தன் விஞ்சையின் புணர்ப்பி னீங்கிப்
பொன்னவிர் சுணங்குபூத்துப் பொலிவுறு மடந்தை முன்னர்
கன்னலஞ் சிலைவே ளன்னக் கட்புலன் கதுவ நின்றான். 16

விரைகமழ் நறிய தண்டார் விதர்ப்பர்கோ னளித்த பாவை
அரசிளங் குமரன் றன்னை யார்வமோ டினிது கண்டாள்
உருவெளி கண்டு நாளு முவந்துள மயர்வாண் முன்னம்
தெருளுறக் காணி லெய்து முவகையார் தெரிக்கற் பாலார்.

உண்ணிறை வுடைய காம முருவெடுத் தென்ன நின்ற
அண்ணலு மணங்கன் னாளு மழகெனு மினிய தேறல்
எண்ணருங் காதல் கூர வினிதினின் மாறி மாறிக்
கண்ணினாற் பருகி யின்பக் களிப்பெனுங் கடலு ளாழ்ந்தார்.

மாதுபால் விழைவி னேகு மனத்தினை யல்ல செய்தல்
தூதினுக் கியல்பன் றென்னுந் தோன்றல்பே ரறிவின் மீட்பக்
காதலி னவன்பாற் செல்லுங் கருத்தினைக் கமலத் தண்பூம்
போதுறை மடந்தை யன்னாட்பொருந்துநாண் டடுத்ததன்றே.

நாணமீ தூர நின்ற நகைமதி முகத்தி னாளும்
பூணினுக் கழகு செய்யும் பொற்புடைத் தோழி மாரும்
நீணகர்க் கடிகொள் வாயி னீங்கிவந் தருகு நின்றான்
சேணுறை யமரன் கொல்லோ திருந்தெழி லியக்க னேயோ.

யாவனோ விவனென் றெண்ணி யிருநிலத் திலங்குபைம்பொற்
சேவடி பொருந்து நீராற் றேவரி னொருவ னல்லன்
தூவியஞ் சிறைய வன்னஞ் சொல்லிய வனப்பு வாய்ந்த
காவல னுங்கொ லென்னக் கருதியோன் றுரைக்க லுற்றார்.

கலைநிலாத் தவழு மாடக் கடிநகர் கடந்து போந்த
சிலைவலாய் நீயிங் கெய்தச் சிறப்புடைப் புவனந் தம்மில்
பொலிவிழந் திருந்த தெந்தப் புவனநீ பொருள தாக
நலனுறு புனித மாய தெப்பெயர் நவிற்று கென்றார். 22

கானமர் கரிய கூந்தற் கன்னிய ரிவ்வா றோதத்
தேனிமிர் தெரியல் வேய்ந்து சிலைத்தழும் பிருந்த தோளான்
பானலங் கடந்த தீஞ்சொற் பைந்தொடி வதுவை வேட்டு
வானவர் விடுத்த தூதன் யானென வழங்க லுற்றான். 23

ஐந்தரு நீழல் வேந்த னார்கலிக் கிறைவன் வெய்ய
செந்தழற் கடவு டென்பாற் றிசையுறை தரும னின்னோர்
பைந்தொடி நின்னை வேட்டுப் படைமதன் பகழி பாயச்
சிந்தனை பிறிதாய் மாழ்கித் தெருமர லெய்து கின்றார். 24

இன்னணந் தேவர் மாழாந் திருநில வரைப்பிற் போந்துன்
பொன்னவிர் திதலை யார்ந்த பொற்பினும் போகம்வேட்ப [ன்
முன்னமெத்தவஞ்செய்தாய்கொலியைவதேமுறைமையென்று
கன்னல்வில் லொளித்து நின்ற காமனே யனைய நீரான். 25

என்றிவன் மொழித லோடு மினையனே நளனென் றெண்ணி
மன்றலங் குழலா ளணி வருத்தமோ டெருத்தங் கோட்டி
நின்றனண் மருங்கு சூழ்ந்த தோழியர் நிடதங்காக்கும் [றார்.
வென்றிகொள் சுடர்வேல்வேந் தற்கெதிர்மொழி விளம்பலுற்

வையக மொருகோ லோச்சி வான்புகழ் நிடதங் காக்கும்
ஐயனை மணப்ப தன்றி யரிமதர் நெடுங்கட் செவ்வாய்த்
தையல்வே றொருவர் நாமஞ் சாற்றினு மாற்றா ளாகி
வெய்யசெந் தழலின் மூழ்கி விளிவதற் கைய மின்றே. 27

என்றவர் மொழிய வேந்த னியம்புவா னெரியின் வீழ்ந்து
பொன்றில்வெங் கனலி தன்னைப் புணர்ந்ததாம்புகன்றசெந்தீ
அன்றிவார் புனலில் வீழ்ந்துள் ளாருயிர் விடுத்தா ளேனும்
துன்றுசீர் வருணன் றன்னைத் தோய்ந்ததாய் விளையுமன்றே.

அன்றியுங் குனலி சான்ற யல்லது வதுவை யாற்றற்
கொன்றுமோ வருண னெவ்வா துதகமோ டளிக்குந் தூய
மன்றலெவ் வாறு முற்றும் வானவ ரருளில் லாமல்
துன்றுநீர்ப் புவியில் யார்க்குஞ் சூழ்வினை முடிக்க லாமே. 29

மாதுகண் பனிப்ப நோக்கித் தோழியர் மாழாந் துள்ளம்
பேதுற வெய்தி நின்ற பெய்வளைத் துயர மெல்லாம்
தூதுநாம் விடுத்த வன்னஞ் சொல்லிய தென்னிற் சற்றும்
ஆதர மின்றி யிவ்வா றுரைக்குமோ வரச னென்றார். 30

இன்னண மணங்க ளுரு மாயமு மிரங்க நோக்கி
மன்னனு மறிவு தீர்ந்து மனஞ்சிறி தயரும் வேலைப்
பொன்னிறப் பவளச் செவ்வாய்ப் பொற்புறு பசியமென்சூட்
டன்னமும் விசும்பி னீங்கி யவ்வுழி யடைந்த தன்றே. 31

எய்திய தூவி யன்ன மின்னகைப் பவளச் செவ்வாய்
மையவாங் கரிய கூந்தல் வாண்முக மினிது நோக்கி
நெய்தவழ் புலவு வைவே னிடதர்கோ னிவனே யுள்ளத்
தையுறேல் கமலப் போதி லணங்கிற்கு மணங்கு போல்வாய்.

மழைமதர்நெடுங்கட்செவ்வாய் வாணுதன்மடந்தாய்நின்மேல்
விழைவிகந் துரைத்தானல்லன் விண்ணவர்க்கியைந்த மாற்றம்
பழுதுறு மென்னு மாற்றாற் பகர்ந்தனன் பரிதிவேலான்
அமுதகங் குன்றி டேலென் றன்பினு லறைந்த தன்றே. 33

அவ்வுரை கேட்ட லோடு மடையலர்ச் செருக்கும் வேலான்
மவ்வலங் குழலி னுடன் மனவலி யினிதி னோர்ந்து
செவ்விதின் மனமுங் கண்ணுந் தெரிவைமேற் கிடப்ப மாறுக்
கவ்வைகொள் வாயி னீங்கி விஞ்சையிற் கரந்து போனான். 34

காரிகை யுளமு நாணுங் கவர்ந்தனன் கரந்து போய
மூரிவெஞ் சிலைக்கை வீரன் கடவுளர் முன்ன ரேகி
நேரிழை தன்பாற் றூது போயபி னிகழ்ந்த வெல்லாம்
சோர்வுறு துரைத்தான்றேவர்தோன்றல்பான்மகிழ்ச்சிகூர்ந்தார்

நைடதம் : அதிவீரராம பாண்டியன்.

## மலர். 6.

### பாம்பும் தவளைகளும்.

சத்துருவை யொருவேளை தலைமேலுந் தோண்மேலும்
வைத்திருந்து சமயம்வந்தால்வதைத்திடவேண்டும்முனமோர்
துத்திவிரி கருநாகக் தோண்மேலுந் தலைமேலும்
வைத்திருந்து தவளைகளை வதைத்தகதை போலுமென. 1

வழுத்துகதை யேதெனவோர் மந்தவிட னெனுநாகம்
கொழுத்ததவ ளைக்குலத்தைக் கொன்றுதின்ன வேகருதி
முழுத்ததவ ளைக்கூட்ட முயங்கியவோ டைக்கரைமேல்
எழுத்தைநினைத் திருப்பவர்போ லிருந்துதுய ரப்படவே. 2

சாலபத னென்கின்ற தவளையர சனுமங்கோர்
கோலவரித் தவளையென்னுங் குதிரைவா கனமேறி
நாலுவகைச் சேனைகளு நல்லமைச்சர் களுஞ்சூழச்
சீலமொடு மேளவகை சிலதவளை சேவிக்க. 3

பவனிவரும் வேளையிலே பாம்பரச னொருகரைமேல்
கவலையுட னிருக்கவவன் கண்டொருதூ தனையனுப்பி
இவனிருக்கும் வகையேதிங் கென்றறிந்து வருகவென
அவனருகிற் சென்றிவனீ யாரிருப்ப தேதென்றான். 4

நாகவிறை நானென்பேர் நல்லமந்த விடனென்பார்
போகிபல சூழவொரு புற்றிலிருந் தரசாள்வேன்
யோகிதனைத் தீண்டிவிட்டேன் யோகிதவ ளையைச்சுமப்பாய்
ஆகியது தரவிரையு மருந்துவைநீ யெனச்சபித்தான். 5

சாபத்தி னாலெனது தலையில்விதி தனைநினைந்தேன்
ஆபத்து நீங்கவுங்க ளரசனைத்தான் சுமக்கவந்த
சோபத்தா லிங்கிருந்தேன் றாதவர சர்க்குரைத்தென்
ஆபத்து நீக்கி லுங்கட் கடிமையெனத் திரிவேனே. 6

எனவுரைத்தான் றாதனும்போ யிவ்வாறே சொலமகிழ்ந்து
தனதமைச்சன் றனையழைத்துச் சாலபதன் கேட்பவவன்
சினமிகுத்த பணியரசன் றினமுநமைச் சுமந்தானம்
இனமிகர்த்த சாதியிலை யென்றுலகும் புகழுமென்றான். 7

அப்பொழுதே சாலபத னரவரசன் றனையழைத்தே
எப்பொழுது நமைச்சுமந்தா லிரையுனக்குத் தினமொன்று
தப்பறவே தருவமென்று சத்திபெறக் கூறலுமே
எய்ப்புடனே மந்தவிடன் மிகக்குனிந்தா னெதிர்புகுந்தே. 8

ஏறினன் சாலபத னேந்திநின்றான் மந்தவிடன்
தேறின னிவரையினித் தின்னலா மெனவெண்ணிச்
சாறின னுனைப்பிரியேன் சாலபத னேயென்று
கூறினன் மனமகிழ்ந்து கொடுத்தானங் கொருதவளை. 9

இவ்வாறு தினந்தினமு மிதஞ்சொல்லி யிரைநுகர
அவ்வாறு தவளையெல்லா மடங்கலுமே விழுங்கிவிட்டான்
ஒவ்வாத சாலபத னொருத்தனுமே தனித்துநமக்
கெவ்வாறு மோசம்வந்த தெனக்கருதி யிருந்தானே. 10

மந்தவிட னொருமவன் மனக்கவலை தனையறிந்தே
முந்தியதன் வளைவாயின் முகத்தின்மெள்ள விடுத்தலுமே
குந்தியவர் வளைபுகுந்தார் கொடியமந்த விடனொரும்
புந்திமகிழ்ந் தவர்தமையும் புசித்துவிட்டா ரெனக்கூறி. 11

ஆகையினா லரசர்களு மமைச்சர்களு மறிவுடையோர்
ஆகியிருந் தாலன்றி யவிவேக ராயிருந்தால்
கூகையினம் போலுமந்தக் குறுந்தவளை யினம்போலும்
ஆகுமெனச் சிரஞ்சீவி யறைந்தனன்வேந் தனுமறிந்தான். 12

பஞ்சதந்திரம்.

---

## மலர். 7.

### அரிச்சந்திரன் விலைப்படுதல்.

வாரண வாசி நண்ணி வண்டுறை யதனின் மேவி
ஆரண நெறிநீ ராடி யந்நதி யகன்று போகிப்
பூரண மலர்க்கை மாதும் புதல்வனும் பின்னே போகக்
காரணத் தமைச்ச னோடுங் காசிநன் னாட்டைச் சேர்ந்தார். 1

ஒருநாள்செல மறுநாளையி லுறுதீவினை நினையா
பொருமால்களி றுடையானொடு புகரோன் மிகவெகுளா
முருகார்தொடை முடியாய்மறை முனிகூறிய பொருணீ
தருமாறுள தெனிலின்றது தருகென்று தடுத்தான். 2

அதிரப்பெரு கரவத்தொடு மழல்கட்புகர் பலகால்
முதிரச்சில சுடுகட்டுரை மொழியப்பொரு டருமச்
சதுரெப்படி யெனவெய்த்துட றளரத்துணை விழிமுத்
துதிரச்சிறி தெதிருத்தர முரையாம லிருந்தான். 3

கல்லென்றுயர் தோளாய்கௌ சிகனெண்ணுத லல்லால்
இல்லென்பது முளதென்பது மியாமெண்ணுத றகுமோ
எல்லொன்றினி யவதித்தின மெனையும்மக னையுநீ
வில்லென்றனள் கற்புக்கொரு வித்தாகி யுதித்தாள். 4

தேமென்கனி வாயாளிது செப்பச்செய லிதுவே
யாமென்றெழ வேவெள்ளியு மதுவேநல னென்றான்
மாமன்னவன் மைந்தன்றலை மிசையுங்குல மடவாள்
பூமென்குழன் மிசையுஞ்சிறு புல்வைத்து நடந்தான். 5

மெள்ளச்செல நாணுஞ்செல விரையச்செல வாய்மை
தள்ளப்புதல் வனையுமயி றனையுமுன நடத்தி
உள்ளத்துய ரறிவாகிய வுரனுனுகு விழிநீர்
வெள்ளத்தினை யடையாவிறை விலைகூறி நடந்தான். 6

மண்மின்னென வருமென்மனை வியையும்மக னையுநீர்
கொண்மின்னென விலைகூறிய கோமானுரை கேளா
விண்மின்னென வலையும்புரி வெண்ணூலணி மார்பன்
கண்முன்னொரு மறையோனதி களவோடெதிர் வந்தான். 7

என்சொல்லினை முன்சொன்னவை யின்னம்பக ரெனவே
மென்சொல்லியை யிள்மைந்தனை விலைகூறின னெனவும்
மன்சொல்லலும் நின்சேயையு மடமானையும் விற்கும்
பொன்சொல்லெனவிறல்வேலினன்மறையோனொடுபுகல்வான்.

களபப்பிடர் மிசைநின்றேறி கவணிற்படு சிலைபோம்
அளவுக்கிரு நிதிநல்கிடி னதுவேவிலை யென்றான்
உளதப்பொருண் முழுதும்முன துரையின்படி தருவேன்
தளவத்திரு நகையாளொடு மகனைத்தரி னென்றான். 9

நின்று காணு நிருபரும் யானுமன்
றன்றுகாண வவாவுறு செம்முகம்
இன்று காண்டக வெய்திய தன்றிமற்
றென்று காண்ப னினியென வேங்கினாள். 10

ஏங்கி மன்ன னிடைவனென் றேபடர்
தாங்கி நாயக தாவிடை யென்றயல்
நீங்கி னாளிறை நீள்கழுத் தைத்தழீஇத்
தூங்கி வாய்விட்டுத் தோன்ற லரற்றினான். 11

கழுத்தைப் பூண்டழுங் காதலன் கைகளை
அழுத்த மாம்பற் றறவிடு வித்தனன்
விழித்த கட்பொறி சிந்திட வேதியன்
இழுத்துப் போய்த்தன தில்லிட மெய்தினான். 12

அந்த ணன்முக நோக்கி யரும்பொருள்
வந்த தோவென்று மன்னன் விளம்பயான்
இந்த மாநிதி பெற்றன னின்னமும்
சிந்தை யோடுரை செய்வதொன் றுண்டென்றான். 13

முனிக்கு முன்னமொ ழிந்தபொ னீந்தனை
எனக்குக் கூலிநீ யீகுவ தென்னென
உனக்கு மீகுவன் வாவென வுத்தமன்
தனக்குப் பின்னடந் தான்வினைச் சல்லியன். 14

அன்ன காலைய மைச்சனை நோக்கியே
என்னை நீவிற்றி வற்குப்பொ னீகெனச்
சொன்ன போதிற்ற னுக்கென வேங்கியெம்
மன்ன கேளென மந்திரி கூறுவான். 15

அன்னை யாயெம தாண்டகை யாகிய
நின்னை யான்விலை கூறுத னீதியோ
என்னை நீவிற்றி வற்குச்செ லத்தகும்
பொன்னை நல்கென வீழ்ந்தடி பூண்டனன். 16

மண்ணில் வீழ்ந்தவ மைச்சனை மார்பணைத்
தொண்ணி லாவத னத்தொளி மாழ்கவே
கண்ணி னிற்புன லாட்டிக் கௌசிகன்
எண்ணு நீர்மைக்கி தேற்கும தோவென்றான். 17

என்ன பாவமெ னக்குப்ப லித்ததென்
றன்ன கர்ப்பல வாவண வீதிவாய்ப்
பொன்னின் மாமுடி மீதிற்புற் சூடியே
மன்ன னைவிலை மந்திரி கூறுவான். 18

ஆதி நூலின ராயினு மல்லது
சாதி யீனர்க ளாயினுஞ் சால்புடைக்
கோதி லான்றனைக் கொண்மினெ னப்பல
வீதி தோறும்வி லையது கூறினான். 19

வார மேதகு மந்திரி மன்னனைத்
தூர மேவிலை கூறிச் சொற்கொளா
வீர வாகுவெ னும்பெயர் மேவினோன்
சூர நீர்மைப்பு லைமகன் றோன்றினான். 20

சுமக்குங் காளைவைத்துத் தூசொடு வாய்புதைத்
தமக்கு வேண்டு முறுபொரு ணல்கிடின்
அமைக்கும் புன்றொழி லாளரெம் போல்பவர்
தமக்கும் விற்கத் தகுதியுண் டோவென்றான். 21

அன்ன தன்மை யரசன் மனங்கொளா
இந்நகர்க் குளிவனல தெம்விலைப்
பொன்னளப் பவனில் லெனப்புந்திவைத்
தென்னைவில் லென்றமைச்சற் கியம்பினான். 22

ஆயி னன்றென் றமைச்சனு மவ்வயின்
மேயி னன்னினி விற்ப னுனக்கென்றான்
ஈயு நல்விலை யேதெனப் பொன்பதி
னாயி ரம்மென் றமைச்ச னியம்பினான். 23

தருகு வேனெனத் தன்பெய ராற்பொறித்
தருளி னன்புலை யற்கமைச் சாவணம்
பொருளை வாங்கிப் புகர்க்களித் தையபோய்
வருக வென்ன மகிழ்ந்தவ னேகினான். 24

வலைய நீத்த புயத்திடை வைத்தகா
அலைய வேபின் றொடர்ந்தரிச் சந்திரன்
தொலைவி லாமுடை நாறிய தொன்னெறிப்
புலையன் மேவும் புலைக்குடி நண்ணினான். 25

பார்த்த வர்க்குப் பசுத்தசை யாய்மறை
கோத்த காளை யிறக்கிக் கொடுத்தபின்
ஊத்தைக் கொட்டிலி னுள்ளிருந் தேபுவி
காத்த கோவுடன் கால னியம்புவான். 26

தூங்கிருள் கடியுஞ் செந்தீச் சுடலையிற் சுடும்பி ணத்துக்
கோங்கிய புலைப்பே றுடை யொன்றுண்டு பணங்கா லுண்டு
வாங்கியீ தெனக்கு வைத்து வாய்க்கரி சியைநீ யட்டுண்
டாங்கிரு வென்று பின்னு மண்ணலுக் கவனு ரைப்பான். 27

எனக்குநீ பணமுங் கொள்ளி யாடையு மினிது நல்கி
உனக்கு வாய்க் கரிசி தந்தே னுண்டிரு பசியை நீக்கி
மனத்துளே வஞ்ச மின்றி மயானத்தி லுறைவா யென்னத்
தனக்குநே ரில்லான் றானு நன்றெனச் சுடலை சார்ந்தான். 28

அரிச்சந்திரபுராணம்: வீரகவிராயர்.

---

## மலர். 8.

### குசேலர் கிருஷ்ணனைப்பார்க்கப் புறப்படுதல்

பருமணிச் சுடிகைப் பஃறலை யரவம்
படரொளி மேருவைப் பொதிந்தாங்
கிருளற விமைக்குங் கதிரொளி சமழ்ப்ப
வெறிகதிர் மணிபல வேந்தி
மருவுவெள் ளருவி பொதிதர வான்றோய்
மால்வரை செறியமிக் குயர்ந்த
பெருவரை முடியி னுள்ளதொன் றளவாப்
பெருந்தவ முனிவர்தஞ் சேரி. 1

ஆங்கதிற் குசேலப் பெயரினோன் முனிவ
ரருங்குலத் தினியபாற் கடலில்
பாங்குறு மதிபோற் றோன்றினோன் வண்டர்
பாண்செய மணநறுக் கொழிக்கும்
பூங்கம லத்தில் வாழ்பொறி யிலகு
பொருப்பன நிறத்துமால் பதத்தைத்
தாங்குறு முளத்தன் பொறிகடிச் செயலிற்
சார்வுறு தடக்குறு மேலோன். 2

மெத்திய பற்பல் கிழிதுணி யிணைத்து
மெல்லிழைச் சரட்டினாற் பொல்லம்
பொத்திய சிதரே நல்லுடை யாகப்
புனைந்தகா ரணத்தினாற் கடல்சூழ்

எத்திசை யவருங் குசேலனென் றொருபே
ரிட்டழைப் பர்கண்மதக் கலுழி
தத்திய கரடத் தறுகண்மால் யானைத்
தரியலர் கூற்றெனப் பொலிவோய். 3

திறலியை தவத்திவ் வாறு திகழ்ந்திடுங் குசேல னென்பான்
உறலியை யத்த வத்திற் குதவிசெய் பாக்கு நாளும்
அறலியை கதுப்பி னாளோ ரணங்கினை வதுவை செய்தான்
மறலியை மன்னர் சென்னி மணிமுடி யிடறுந் தாளோய். 4

மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந் துவப்ப வூட்டு
நேசமிக் குடையாள் கொண்க னினைப்பறிந் தொழுகு நீராள்
தேசுறு வாய்மை யுள்ளாள் சினந்திட லென்று மில்லாள்
பேசுதிண் கற்பு வாய்த்தாள் பெற்றதே கொண்டு வப்பாள்.

மலையிட்ட செல்வத் தார்கண் மகிழவோர் மகவுந் தாரான்
அலையிட்ட முட்டாட் செய்ய வம்புயத் துறைவ னேரேழ்
தலையிட்ட விருபான் மைந்தர்த் தந்தனன் பெருமை யன்றோ
நிலையிட்ட தழும்பு வாய்ந்த தெரியலந் தடந்தோள் வேந்தே.

பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரன் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்துநீட்டி
மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி
இல்லெலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்த ஞான்றும். 7

இருநிலத் தியாவர் கண்ணு மேற்பதை யிகழ்ச்சி யென்ன
ஒருவிய வுளத்தான் காட்டி லுதிர்ந்துகொள் வாரு மின்றி
அருகிய நீவா ரப்புற் றுனிய மா ராய்ந் தாராய்ந்
துருவவொண் ணகத்தாற்கிள்ளியெடுத் துடன்சேரக்கொண்டு.

வந்துதன் மனைகைந் நீட்ட வாங்கிமற் றவற்றைக் குற்றி
அந்தமெல் லியல்பா கஞ்செய் ததிதிக்கோர் பாகம் வைத்துத்
தந்ததன் பங்க மின்று தவலரு முவகை பூத்து
மந்திர மறைகட் கெட்டா மாலடி நினைந்தி ருப்பான். 9

இற்றிவன் வாழ்க்கைத் தன்மை யிருபத்தேழ் மைந்த ருக்கு
மற்றவப் பாகக் கஞ்சி மட்குழி சியைப்பால் வைத்துப்
பற்றுகோ ரிகையான் மொண்டு வாக்கிப்பற் றுமை கண்டு
வெற்றுடம்பாகி நிற்பண் மெலிவள்பின் னென்செய்வாளால்.

ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு கைந்நீட்டு
முந்தி மேல்வீழ்ந்
திருமகவுங் கைந்நீட்டு மும்மகவுங் கைந்நீட்டு
மென்செய் வாளால்
பொருமியொருமகவழுங்கண்பிசைந்தழுமற் றொருமகவு
புரண்டு வீழாப்
பெருநிலத்திற்கிடந்தழுமற் றொருமகவெங்ஙனஞ்சகிப்பாள்
பெரிதும் பாவம். 11

இவ்வண்ணங் கலாம்விளைக்கு மைந்தர்களை நனிநோக்கி
யிரங்கி யேங்கிச்
செவ்வண்ணக் கரதலத்தாலணைத்துமடித் தலத்திருத்திச்
சிறப்புச் செய்து
மைவண்ணக் கண்ணீரைத் துடைத்துமுகம் வெரிந் புறந்தை
வந்து மாம்பல்
அவ்வண்ண வாய்முத்தங்கொண்டுநயத்தோர்விதத்தி
லாற்றல் செய்வாள். 12

குண்டலமோ திரங்கடகஞ் சுட்டியயன் மனையார்தங்
குழவிக் கிட்டார்
புண்டரிகக் கண்ணன்ன யெனக்குநீ யிடாதிருக்கும்
பொறுமை யென்னே
கண்டெடுத்திப் போதிடெனக் கரைமதலைக் கில்லாதான்
கடன்றந் தானுக்
கெண்டபச்சொல் வார்த்தையென நாளைக்கு நாளைக்கென்
றியம்பிச் சோர்வாள். 13

நண்புகூர் தருமன்னப் பால்சிறிதல் லாமன்மற்றோர்
நற்பா லில்லை
பண்புகூர் தருதனையர்க் கெஞ்ஞான்றும் பசிதீர்ந்த
பாடு மில்லை
கண்புகா விவ்வறுமை கண்டுமறை யவனுமுளங்
கவற்சி யில்லை
எண்புகாப் புகழவன்றன் செயல்கண்டு மனைவிவிருப்
பிகத்த லில்லை. 14

கற்புடைய வருந்ததியே முதன்மடவார் புகழவருங்
கற்பின் மிக்காள்
பொற்பமையா மிடியென்னுஞ் சாகரத்து ளழுந்திமனம்
புண்ணே யாகிப்
பற்பலநாள் செலவொருநா ளமையமறிந் துளந்துணிந்து
பண்பிற் போற்றிச்
சொற்பெருநற் புகழ்க்கணவன் முகநோக்கி யெண்ணியிவை
சொல்ல லுற்றாள். 15

தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச்
சரீரத்தை யுலர்தர வாட்டும்
தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்பும்
சாற்றரு முலோபத்தை மிகுக்கும்
தரித்திரந் தலைவன் றலைவியர்க் கிடையே
தடுப்பருங் கலாம்பல விளைக்கும்
தரித்திர மவமா னம்பொய்பே ராசை
தருமிதிற் கொடியதொன் றிலையே. 16

யாதவர் குலத்திற் றோன்றிய வரசர்
யாவர்க்கு மதிபனு மிணையில்
மாதவ னுடனீ பலகலைக் கடலை
வாய்மடுத் தனையென வகுப்பார்
ஆதலினப்பீ தாம்பரன் மருங்கி
லணைந்தவன் பாற்பெருஞ் செல்வம்
தீதறக் கொண்டு கொடுத்துநஞ் சிறுவர்
செல்லனோய் தவிர்க்குதல் வேண்டும். 17

கண்ணனைத் துளவ மாலிகை நிறத்திற்
கமலைவாழ் தரவருள் புரிந்த
மண்ணிய மணியைத் தினந்தினம் போற்று
மாசறு தவத்தின ருள்ளத்
தெண்ணிய வெண்ணி யாங்களிப் பவனை
யெய்திநஞ் சிறுருயச் செல்வம்
நண்ணிவா வென்று நங்கைசொற் றிடலு
நற்றவக் குசேலனீ துரைக்கும். 18

கல்லினுட் சிறுதே ரைக்குங் கருப்பையண்டத்து யிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும் புனத்துழாய்க்கண்ணியண்ணல்
ஒல்லுநின் மைந்தர்க் காவா தொழிவனோ வொழியானுண்மை
மெல்லியல் கொண்ட துன்பம் விடுவிடு மறந்து மெண்ணல்.

சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளார் மூக ராவர்
பறியணி செவியு ளாரும் பயிரறு செவிட ராவர்
குறிபெறு கண்ணு ளாருங் குருடராய் முடிவ ரன்றே. 20

மதலையைப் பெறுநாட் டுன்பம் வளர்த்திடு நாளுந் துன்பம்
விதலைநோ யடையிற் றுன்பம் வியன்பரு வத்துந் துன்பம்
கதமுறு காலர் வந்து கைப்பற்றிற் கணக்கி றுன்பம்
இதமுற லெந்நாள் சேயா லெற்றைக்குந் துன்ப மானுல். 21

பாற்கட லடுத்த மீனப் பால்விரும் பாது மற்ற
ஏற்குமா விரும்பி னற்போ லெம்பிரான் றிருமுன் சார்ந்து
நாற்கதி கடக்கு மின்பச் செல்வத்தை நண்ணி டாமல்
சேற்கருங் கண்ணுய் துன்பச் செல்வமோ நண்ணுவேன்யான்.

அந்தண னுரைத்த மாற்ற மனைத்துமஞ் செவியி லேற்று
நந்தலி லுண்மை யீதென் றுணர்ந்துந்தா னயந்து பெற்ற
மைந்தர்பால் வைத்த வாசை மயக்கரு ளாகிப் பின்னும்
புந்தியின் விரும்பிப் பாதம் போற்றிநின் றிதனைக்கூறும். 23

முன்பொரு கராவான் மொய்வலி சிந்து
 மும்மதக் கறையடிக் கயமும்
வன்புடைப் பொன்னன் புரிகொடு மையினான்
 மனமெலி பிரகலா தனனும்
அன்பினோ டேத்தி யழைத்தலா னன்றே
 யலைகடல் வண்ணன்வந் தாண்டான்
என்பரா தலினான் முயற்சிசெய் பவருக்
 கெய்தரும் பொருளுமொன் றுளதே. 24

வெண்டிரை வீசுங் கருங்கடற் புடவி
 விண்ணகம் பாதல மிவற்றுள்
மண்டிய வுயிர்க ளெவற்றையுங் கமலை
 மார்பினன் புரப்பனே யெனினும்
அண்டர்கள் புகழு மையநீ யுயிர்த்த
 வரியமக் களையுமென் றனையும்
பண்டைநூற் கியையப் பாதுகாத் தளித்தல்
 பகருநின் கடனெனப் பகர்ந்தாள். 25

இடம்பா டிலாமை முகன்சாம்பி யிரங்கிக் கூறும்
திடம்பாடு கொண்ட பெருங்கற்பின டேமொழிக்கு
மடம்பா டறுத்துக் கலைமுற்றுணர் வாய்மை சான்றோன்
உடம்பா டிலாமை யுடையானல னாயி னானே. 26

கண்ணன் றனைக்கண் ணுறிற்கண்ணுங் கதியு நன்கு
நண்ணுஞ் சிறுமைந்தர்களா லுளநையு மின்னாள்
எண்ணு நிரம்பு மெனச்சில் பொழுதுள்ளத் தெண்ணி
ஒண்ணு மனையாண் முகநோக்கி யுரைக்க லுற்றான். 27

ஒன்றும்வேண்டலராயினுஞ்செல்வர்பாலுறுமிடியவர்சார்ந்தால்
இன்றுவந்தமையாதினைக் கருதிமற்றிவரெனவுளத்தெண்ணிக்
கன்றுமாறுபல்குறிப்புரை நவிற்றுவர் காதலினவர்பாற்போய்
மன்ற வந்தது சிறுமையே யிவர்க்கன்றி மற்றிலை யறிபாவாய்.

TB 031,1 (5) N2
84628

இந்த வாறிவ னுரைத்தலென் னெனவுளத்
தெண்ணிடே லெக்காலும்
பந்த மானிடர் தன்மையிற் றெனப்பகர்ந்
தேன்பரம் பொருளாய்
சந்த மாமறைத் தலைவன்பா லுறுவது
தகாதென்றே னலன் கண்டாய்
எந்த வாறுகை யுறையிலா தையன்முன்
யான்படர்குவன்மாதே. 29

என்றுரைத்த கொழுனனுரை கேட்டுமகிழ்ந் திதற்கென்னே
செயலென் றெண்ணி
அன்றுமுத லுபவாசந் தானிருந்து மாமுனிவ
னரிதிற் றேடி
நன்றளிக்கு நெல்லினிற்றன் னொருபாகம் வேறெடுத்து
நலக்கச் சேர்த்துத்
துன்றியவந் நெல்லையொரு தினத்தறலி னனைத்துவறுத்
தெடுதுத் தூய்தா. 30

கறையிட்டு நனிகாண வுலக்கைகொடு மிக்கிடித்துக்
கரிசு போக்கி
நிறையிட்டவவலாக்கிக் குசேலமுனி கந்தையினி
னேடி யோர்பான்
மறையிட்டவொழுங்குடையாண்முடிந்துகொடுத்தினிதுபோய்
வருக வென்றாள்
சிறையிட்ட பவநீங்கும் வழிகண்டோன் வழிதேடிச்
செல்ல லுற்றான். 31

குசேலோபாக்கியானம்; தேவராஜப்பிள்ளை.

---

## மலர். 9.

## கஜேந்திரமோட்சம்.

சீருறு கலச வப்பிற் றிடரொன் றுண் டதனின் மீது
மேருவுண் டதற்கு மூன்று மின்னிய சிகர முண்டு
தூரமு மகலந் தேவர் தொகையினு யிரமாங் காதம்
காரண மாயி ருக்குஞ் சிலையெலாங் கனக நேராம். 1

அந்நிலை முனிவர் தேவ ரருந்தவம் புரிந்து நெஞ்சில்
உன்னிய பொருளை மாயோ னுகந்தளித் திடவே கொள்வர்
கின்னரர் கருடர் கியாதிக் கேசரர் முதலாய் வாழ்வர்
பின்னுமவ் வனத்தி லுற்ற பெருமையு முரைக்க லுற்றும். 2

பலபல மிருக வார்ப்பும் பட்சிக ளார்ப்புஞ் சாயும்
சலதியி னார்ப்புந் தாரு தருசரு கார்ப்புஞ் சாலக்
கலைதெரி முனிவர் தேவர் கருடர்கந் தருவ ரார்ப்பும்
நிலையதா மதன்கு ணத்தை நிகழ்த்துதற் கருமை யாமால். 3

கன்னலை முறித்துமெல்லுங் கதலியின் கனியைத் தின்னும்[ம்
செந்நெலைப்புசிக்குந்துள்ளுஞ்செறிவிளங்கனியைக்கொள்ளு
அந்நிலை யானைக் கெல்லா மரசனு யிருக்கும் யானை
தன்னினம் பிரிந்து கோடி கரிணியோ டிருந்த தன்றே. 4

அல்லலோர் நாளி லேயு மறிந்திடா வத்தந் திக்குத்
தொல்லைநாட் செய்த தீமை தொடர்ந்தநா ளிந்நா ளாகி
எல்லையாம் வனத்தை விட்டு வெண்ணிலாக் கரிணி யோடு
மெல்லுநல் லுணவு தேடி மேய்ந்தநா னெடிய தூரம். 5

பங்கயப் பொய்கை தன்னைப் பார்த்துடன் பரிவாய்க் கோடி
அங்கயக் கரிணி யோடவ் வாரியி னிழிந்து தங்கள்
அங்கமுங் குளிரத் தோய்ந்தாங் கருந்தியே தாகந் தீர்ந்து
பொங்கமாய்த் தும்பி ராஜன் புதுமலர் கொய்யுங் காலை. 6

முன்பொரு சாபத் தாற்கந் தருவனு முதலை யாகித்
தன்பெரும் பலத்தி னாலே சலத்திடை யிருந்து தந்தி
பின்வருங் காலை நாடிப் பிடித்திட வுதைக்க நொந்து
வன்பெருங் கரவு மீண்டும் வந்துமுன் றாளைக் கிட்டி. 7

பற்றியே யிழுக்கு மந்தப் பாரிய முதலை யின்வல்
நெற்றியைப் பிளப்ப னென்று நீண்ட தன் றுதிக்கை யாலே
மொத்திடக் கரவு நீரின் மூழ்கியே மேல்வந் தெய்தி
வெற்றிதோல் வியுமி லாமல் வெகுண்டுபோர் செய்யுங் காலை.

கூடியே வந்து நின்ற கரிணிகள் கோடி தாமும்
வாடியே வெருவிச் சால மயங்கியே கரையி லேறி
நாடியே நோக்கி யின்று நாதனுக் கிந்தப் பாடு
தேடியே வந்தா னம்மாற் செய்வதென் னென்று கூறி. 9

ஆளனைப் பிரிந்து செல்ல வத்தியின் குழாங்க டங்கள்
தாளெழா தாக நின்று தயங்கியே யலறு மந்த
வேளையிற் பற்றி நின்ற கரவினை வீசி யின்னே
மீளுவ னென்று தந்தி மிகவலிந் தீர்க்குங் காலை. 10

கரையின்வா யீர்க்குந் தந்தி கரவு நீர்நடுவி னீர்க்கும்
வரையுடன் வரையெ திர்ந்து மற்பொரு வதுபோல் வாயில்
நுரைபெற வொன்றுக் கொன்று நோக்கியே தாக்கி யங்கம்
உரைபடத் தசைகள் சிந்த வுதிரமும் பெருக வன்றே. 11

நூறுபத்துவருடங்கள்போர்செய்து நொந்துவாடியகுஞ்சரம்
பூரு வத்துள ஞானம் வந்து பொருந்தி யேவினை போக்கிட
வேறு திக்கில்லை யென்றறிந்தது வேண்டி யேசரு வேசனைக்
கூறியேநெறியைக்கொண்டேக குணத்தினாலே துதித்திடும். ()

ஆதி யாகியு நடுவு மாகியு மந்த மாகியு மநாதியாய்ச்
சோதியாகியுஞ்சொரூபமாகியுஞ் சுருதியோதிடுபொருளுமாய்
நீதி யாகியு நெறியு மாகியுநேசர் தம்மிடை நிலையுமாய்
நாத னாகியும் வீறு மீசனை நம்பி னேனென முறையிடும். 13

இவ்வி தத்தினிற் புண்ட ரீகமு மீச னைத்தொழு தேத்தியே
கவ்வி நின்றிடு முதலை வாதனை கழியு மாறினிக் காண்கிலேன்
எவ்வி தம்மினி யேதுசெய்குது மென்றே யேகம னத்ததாய்
அவ்வு முவ்வுடன் மவ்வு மாகிய வாதி யேயப யம்மெனும். 14

அந்தரந் தன்னை யானை யண்ணாந்து பார்த்துச் சொல்லும்
எந்தனைக் காக்கத் தக்கா ரில்லையோ யிங்கே யாரும்
எந்தநே ரத்தி லீசன் வந்தென்னைக் காப்பா னென்று
சிந்தனை பண்ணு மெட்டுத் திசையினைத் திரும்பிப் பார்க்கும்.

இடிநிகர் கரவாற் கால்கர மோய்ந்து
வேக்கமா யுயிர்தடு மாறிப்
படிவமு முருகி வாலசை வற்றுப்
பரிவுட னரற்றுபே ரொலியால்
இடியன லப்பாய்க் கால்வெளி பூவா
யெண்ணுமும் மூர்த்தியின் முதலாய்
அடிகளா மாதி மூலமே யெனுமம்
முறையரி செவிநுழை போழ்தே. 16

பங்கயத் திருவைப் பாரான் பணிமுடி நிழலைத் தேடான்
சங்கு சக்கரமு மேந்தான் தன்னெகிர் தொழுது நிற்கும்
இங்கிதக் கருடன் மீதி லேறிடா னிபத்தைக் காக்கக்
கங்கையைப் பெற்ற பாத சாரியாய்க் கடுகி வந்தான். 17

செங்கண்மா லுநடந்துவேகமாய்ச் செல்லவேசெழுந்தூரமாம்
பங்க யப்புனல் மேவு தும்பியின் பயம கன்றிட வானுறை
செங்கதிர்த்திரள்கோடி போலவேதேசுகொண்டவத்திகிரியை
மங்கைநாயகனேவியேமுந்திவந்து நின்றனன்கரையின்வாய்.

மண்ட லம்மிரு பிளவ தாகவு மாதி ரங்களும் வெடிபட
விண்ட லங்கள்பி ளந்த தாகவு மேரு வும்மிக வுருகவே
குண்ட லஞ்சிர சுந்து ளங்கிடக் கும்பி யைப்பொருகரவிரு
துண்ட மாகவே செய்து மீண்டரி கையிலாழியுநின்றதே. 19

நீரிடை நெடிது நாளாய் நிலையற்று நின்றயானை
பாரிய கரவு மாளக் கண்டு தன் பயம கன்று
காரிய முடிக்க விங்குக் காரண மாக வந்த
சீரிய திருமா றன்னை நோக்கியே சிரசை யாட்டும். 20

ஆடிய சிரசின் மீதி லரிமலர்க் கையை வைத்து
வாடினை துயர மெய்தி மனமொரு மித்து நம்மை
நாடினை யினியோர் நாளு நாசமே வாராதென்று
நீடிய வுடலைக் கையாற் றடவின னெடிய மாலும். 21

தடவிய வரியின் கையைத் தந்தியுந் தன்கை நீட்டி
அடைவுடன் மோந்து கொண்டங் களவிலாப் புளகமாகிக்
கடவுளின் கருணை யாலோங் காரமே செய்து நின்ற
உடனேமுன் னுளி லுள்ள வுருவினைக் கொண்ட தாங்கே. 22

கல்லுரு மாறி நின்றன் கழற்றுகள் கதுவா முன்னம்
நல்லுருப் பெற்ற தென்னே நாதனே மடுவி லுற்ற
வல்லுரு விடங்கர் வாயின் மடங்கவே வமைத்த வென்றன்
தொல்லுரு தொலைக்கு மாறு தோன்றினை யென்மு னின்றே.

இறைஞ்சியே நின்ற விந்தி ரத்துய்மன் றனையே நோக்கித்
துறந்தனை தீமை யெல்லாஞ் சுகமினிப் பெறுவா யென்று
அறந்திரு நாதன் சொல்ல வரசனு மரிரூ பமான
நிறந்தனை யெய்தி மோட்ச நிலையது பெற்ற வாறே. 24

சத்திய வசன மாகச் சாற்றுவே னுலகின் மீது
அத்தியி னுயிரைக் காத்தோ னம்புய மலர்நற் றாளைப்
பத்தியாற் றொழுத பேர்க்குப் பழவினை நீங்கி ஞான
முத்தியே பிறவி நீங்கு மோட்சமுஞ் சித்தி யாகும். 25

**கஜேந்திர மோட்சம்:—திருவடி தாசர்.**

# அரும்பத விளக்க வுரை

## மலர்.— 1.

### இராமரது இளமைப் பருவம்.

1. மாநதி—பெரிய ஆறு; புனல்—நீர்; திண்கொடி—வலிய கொடிச்சீலை; இறைவன்—அரசன்; வண்புகழ்—மிக்க கீர்த்தி; தேவியர்—மனைவியர்; முதன்மை சூடு—தலைமை பெற்ற; என்பார்—என்று சிறப்பித்துச் சொல்லப்படுவோர்.

2. மடவார்—பெண்கள்; சொற்ற—சொல்லிய; சுடர்—ஒளி; வேள்வியை—யாகத்தை; மைந்தர்—புத்திரர்; பிறங்கு—விளங்குகின்ற; எற்று—(பகைவரைத்)தாக்குகின்ற; நீள்புயத்து—நீண்ட தோள்களையுடைய.

3. அரியணை—சிங்காதனம்; வீற்றிருந்தான்—பெருமையாக அமர்ந்திருந்தான்; இன்னமாநிலம்—இந்தப் பெரியபூமி; படைப்பன்—சிருட்டிப்பேன்; என்றவன்—என்றுகூறியவிசுவாமித்திரன்.

முன்னொரு காலத்தில் திரிசங்கு வென்னுமரசன், மனிதவுடலோடு சுவர்க்கம் புகவிரும்பித் தனது குலகுருவாகிய வசிட்டரை அதற்கருளுமாறு வேண்டினன். வசிட்டர் அது இயலாதென மறுக்க மன்னன் அவரையிகழ்ந்துரைத்தனன். அவர் கோபித்து அவனைப் புலையனாகுக வெனச் சபித்தனர். உடனே அவன் புலையனாகி, வசிட்டருக்குப் பகைபூண்டு தவஞ்செய்து கொண்டிருக்கும் விசுவாமித்திரரை யெய்தித் தனது குறையையிரந்து நின்றனன். அவர் தமது தவபலத்தினால், திரிசங்குவைச் சுவர்க்கலோகத்திற்கனுப்பினர். நீச சரீரத்துடன் ஒருவன் தமது உலகிற்கு வருவது பொறாத தேவர் அவனைச் சுவர்க்கத்தினின்றும் தலைகீழாக வீழ்த்தினர். அபயம் அபயம், எனக்கதறிக்கொண்டே விழும் திரிசங்குவைக் கௌசிகர் தமது யோகமகிமையால் அந்தரத்திலேயே நிறுத்தித் தேவலோகம் பூலோகம் முதலியன படைப்பனென்று தொடங்கினர் என்பது கதை.

இயல்—(யான்)செய்யும்; தருதி—கொடுப்பாய்; வேள்விக்குன்னன் மைந்தரில்—வேள்விக்கு + உன் + நன் + மைந்தரில்.

4. மன்னர்கோன்—அரசர்க்கரசன் (தசரதன்);

முனியை—(விசுவாமித்திர) முனிவனை; பொறுத்தி—பொறுப்பாய்; சென்னியில்—தலையில்; புனையா—தரித்து; உறுத்தி—(இவர்தமைக்காப்பது உமதுகடமையென்று) வற்புறுத்தி(க்கூறி); உவந்து-சந்தோஷித்து; மாமுனி—பெருந்தவமுனி(விசுவாமித்திரன்); செம்மலும்—ஆண்மையிற் சிறந்தவனும் (இராமன்); தம்பி—இலட்சுமணன்.

5. காமன்—மன்மதன்; உலந்தது—இறந்தது;

காமன்மாறுபட்டுலந்ததோர்காடு—அங்கநாட்டினிடையுள்ள காமஞச்சிரமம் என்னும் வனம். பூர்வகாலத்தில் சூரபத்மாதியர்தேவரைப் பெருந்துன்பஞ்செய்துவந்தனர். அது பொறுக்காததேவர் சிவபிரானை யெய்தி, தங்குறையிரப்ப அப்பிரான் யாம் ஒருபுத்திரனை யுயிர்த்து அவனைக்கொண்டு அவ்வசுரரை முடிப்போம்,எனவருளினர். சின்னாட் கழித்து அவர் சனகாதியர்க்குஞானோபதேசஞ் செய்ய யோகத்திலமர்ந்தனர்.அதுகண்டதேவர் யோகத்திலாழ்ந்திருப்பவர் புத்திரனைப் பெறுத லெவ்வாறு என அஞ்சிக்காமனைச் சிவபிரானது யோகத்தைக்கலைக்குமாறு வேண்டினர். காமனும் சிவபெருமான்மீது மலரம்பு தொடுத்தனன். சிவபிரான் வெகுண்டுகாமனை நெற்றிக்கண்ணால் நோக்க அவன் உடல் வெந்து நீறாயினன். அவனங்கமழிந்து விழுந்த காரணத்தால் இவை இப்பெயர்களால் வழங்கலாயின.

ஏகி—போய்; தாமம்—மாலை; வார்குழல்—நீண்ட கூந்தல்; பட—அழிய; சரந்தூண்டி—பாணம் ஏவி; ஏமம்—காவல்; எய்தி—அடைந்து; ஓமமாவவி—ஓமம் + மா + அவி; யகாக்கினியிலிடும்பெருமை பொருந்திய நெய் முதலிய அவிசு; உறையுள்—வசிக்குமிடம்.

6. வெவ்விலிச்சினம்—வெம்மை+வில்+இ+சினம்; சினம்—கோபம்; வீரரை—இராமலட்சுமணர்களை; சாக்கென—காக்க+என; ஆர்த்தார்—ஆரவாரித்தார்;கவ்விட—பற்றிக்கொள்ள; சரமாரி—சரமாகிய மழை; வானத்தை—ஆகாயத்தை.

7. கண்டவீரனும் — இராமனும்; கடிந்து—கோபித்து; சண்டவேகத்தள்— மிக்கவேகத்தையுடையவள்; தனையரில்—புதல்வரில்; கடல்புக—கடலிலேபுகுந்து (ஒளிக்க); துரந்தான்—துரத்தினன்; மண்டு—(மேன்மை) நெருங்கிய; மகிழ்ந்தான்—சந்தோஷித்தான்.

8. மறை—வேதம்; தானும்—இராமனும்; கண்டல்—தாழை ஒருமரமுமாம்; கானம்—காடு; பண்டைநிறம்—பழயவடிவம்.

இராமன் அகலிகைக்குப் பண்டைநிறம் அருளுவதற்கு முன் அவள் கல்லாக விருந்தனள். கௌதமரிஷியின் பத்தினியாகிய அவள் இந்திரனால் கற்பழிக்கப்பட்டனள். அதனையறிந்த முனிவர் அவளைக்கல்லாகுக வெனச் சபித்தனர். உடனே கல்லாக விழுமவள் கணவரைநோக்கி நும்மை மீண்டும் யானெய்து மாறு அருளுகஎன வேண்டினள். அவர் இராமன் கழற்றுகள் நின்மீதுபட்டவுடன் கல்லுரு நீங்கிஎன்னை யடைவாய் எனவருளினர். இஃது அகலிகை கல்லுருப்பெற்றவரலாறு. பணித்தருளி—கட்டளையிட்டு; விண்டொடும்—விண் + தொடும்; ஆகாயத்தைத்தொடுகின்ற; மேவினர்—அடைந்தனர்.

9. தழல் புரிவேள்வி — தழல்வேள்விபுரி; அக்கினிபொருந்திய யாகத்தினைச்செய்கின்ற; முனிவ—முனிவனே; வினையம் — காரியம் அம்சாரியை; விறல்புனை—வெற்றிபொருந்திய; தனு—வில்; காண்குற—காண; சமைந்தார்—வந்தார்.

10. இயம்ப—சொல்ல; நெடுஞ்சிலை—நீண்டவில்; வள்ளல்—வரையாதுகொடுப்பவன் (இராமன்); அந்தரவானில் ஆகாயத்தில்;அரம்பையர்—தெய்வமகளிர்; உகந்திட—களிக்க; சார்ந்திடும்—சேரும்.

11. நலந்திகழ்—நற்குணநற்செய்கைகளால் விளங்குகின்ற; துனியறும்—குற்றமற்ற; தனையர்—புத்திரர்(பரதசத்துருக்கினர்); கிளர்—விளங்குகின்ற; தவமுனி—வசிஷ்டர்; வல்லான்—வல்லவன்(தசரதன்)

12, தெள்ளமிழ்தம்புரை—தெளிந்த அமிர்தத்தையொத்த; மணந்தான்—விவாகஞ்செய்து கொண்டான்; முள்ளெயொத்த எயிறு; முள்—மயிலிறகினடி; எயிறு—பல்; இலவையொத்தவிதழ்; இலவு—இலவமலர்; இதழ்—உதடு; மூவரையும்—ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தியென்னும் மூவரையும்; வெள்ளிலை—வெற்றிலை; மூவரும்—இலட்சுமணன், பரதன், சத்துருக்கினன் என்னும் மூவரும்; வேட்டார்—மணந்தார்.

13. அந்நகர்தன்னை—அத்தமிதிலாநகரத்தை; மன்னும்—நிலைபெற்றுள்ள; மழுப்படையான்—கோடரியை ஆயுதமாக உடையவன் (பரசுராமன்); வாங்கி—வளைத்து; தவமார—தவஞ்செய்ய; அணிமாடம்—அழகிய வீடு; புகுந்தார்—வந்துசேர்ந்தனர்.

## மலர்—2.

### அரிச்சந்திரன் தன் நகர் நீங்குதல்

1. தலம்—பூமி; முனிவன் — விசுவாமித்திரமுனிவன்; அளித்தேம்—கொடுத்தோம்; உறைதல்—(நகரில்) வசித்தல்; இலகு—விளங்குகின்ற; எழில்—அழகு; போந்து—போய்; அமைச்சர்—மந்திரிகள்; பரதவிக்க—வருந்த; பதாதி—படைவீரர்; மொய்க்க—நெருங்கி (வர); குலமகன்—தேவதாசன்(லோகிதாசன்);மடமயில்—சந்திரமதி; கொற்றவேந்தன்—அரிச்சந்திரன்.

2. தொடை—மாலை;பணி—ஆபரணம்;துடிமுரசம்—வலியபேரிகை; தாமம்—மாலை; கவரிக்குழாம்—வெண்சாமரைக் கூட்டம்; கரி—யானை; பரி—குதிரை; தேர்க்குலம்—தேர்க்கூட்டம்; கடை—புறவாயில்; மறுகு—வீதி.

3. சிறை—இறக்கை; போகில்—பறவை; வரம்பு—வரப்பு;கரம்—துதிக்கை; பொறி—சூத்திரக்கயிறு; பாவை—பதுமை(பொம்மை);சாற்றலுற்றார்—சொல்லத்தொடங்கினர்.

4. பெருந்திருவும் — பெரியசெல்வமும்; கொடிஞ்திண்டேரும் —கொடிகட்டியவலியதேரும்; பண்டு—முன்பு; மாளிகை—அரண்மனே; பரிசனமும்—ஏவல்செய்வோரும்; தாரான்—மாலையை யணிந்தவன் (அச்சச்சந்திரன்); வாணுதல்—ஒளிபொருந்திய நெற்றியையுடையவள் (சந்திரமதி); வறியோர்—தரித்திரர்.

5. அலமந்து—மனக்கலக்கமுற்று: வயிறலைத்து—வயிற்றிலடித்து; ஏங்கி—ஏக்கமுற்று; இரங்குங்காலை—அழும்பொழுதில்; பிடி—பெண்யானே; கிளை—உறவாயுள்ளயானேகள்; களிறு—ஆண்யானே; என்ன—என்று; குன்றனைய—மலையையொத்த; சரையு—சரயுநதி.

6. உரைபெறு—புகழ்பெற்ற; சீர்—சிறப்பு; இரவி — சூரியன்; உரிமையாய—சொந்தமான; தாதி—தோழி; விரைமலர்த்தாள்—வாசனைபொருந்தியசெந்தாமரைமலர்போன்றபாதம்; அரற்றிட— கதறியழ; மேல்வரை—அக்கரை; வரிமணல்—நிறைந்தமணல்; சொரியும்—சிந்தும்; நறுங்காவில்—மணம்வீசுகின்றசோலையில்; புக்கான்—போயினன்.

7. வரைக்கனகம்—மேருமலை (வரை—மலை; கனகம்-பொன்;) புயத்தினன்—தோள்களையுடையவன் (அரிச்சந்திரன்); குழலாள்—கூந்தலையுடையவள்; இருபாலும்—இரண்டுபக்கமும்; திரை—அலை; பொருனென—பொறுக்காதவனேப்போல; செங்கதிரோன்—சூரியன் விளைப்பனவும்—செய்வனவும்; அறிதும்—அறிவோம்.

8. அடல்—வன்மை; போற்றி—வணங்கித்துதித்து; மீண்டு—திரும்பி; எழுந்தருள்வது—வருவது; ஆங்கு—அவ்விடத்து; மூதூர்—பழையவூர் (அயோத்தி).

9. மரவுரி—மரத்தினின்றும் உரித்தெடுத்த ஆடை; தகைந்து—சேர்த்து; ஈர்த்து—இழுத்து; அவனே—விசுவாமித்திரனே; மடை—நீர்மடை; வயல்—கழனி; புரக்க—காக்க; பதம்—பாதம்; விறல்—வெற்றி; பணிந்து—வணங்கி.

10. படி—பூமி; புதைத்து—மூடி; அந்தோ—ஐயோ; கூவுமெல்லை—சொல்லும்பொழுது; கடிபொழில்—வாசனை வீசுகின்ற சோலை; கௌசிகனும்—விசுவாமித்திரனும்; அடியிணே—இரண்டுபாதங்கள்; அரசர் கோமான்—மன்னர்மன்னன் (அரிச்சந்திரன்).

11. வெய்தா — கொடுமையாக; வேடுவர்—வேடர்; விலங்கனேத்தும்—மிருகமெல்லாவற்றையும்; வெகுண்டு—கோபித்து; ஏனத்தை—பன்றியை; எய்தாய்— (அம்பைத்) தொடுத்தாய்; இசை—பாட்டு; தூரத்தடித்தாய்—அடித்துத்துரத்தினே; மண்டலத்தை—பூமியை; இவர்—இந்நகரமாந்தர்; செப்பினன்—சொன்னன்.

12. சிறுத்தவர்—சிறியவர்; செவ்வியோய்—செம்மைக்குணமுடையாய்; பொறை—பொறுமை; என்னும்—என்னவாகும்; முறை—நீதி; புலமை—கல்வியறிவு; ஒறுத்திடினும்—தண்டித்தாலும்.

13. புவி—பூமி; புன்மை—அற்பத்தன்மை; மொழிவழு—சொல் தவறுதல்; எய்தும்—அடையும்; முடக்கமானல்—தவறுமானல்; பொறுத்தும்—பொறுப்போம்.

14. வண்மை—ஈகை; அழல்வேள்வி—அக்கினியையுடையயாகம்.

15. உகந்து—சந்தோஷித்து; முனிவால்—கோபத்தால்; தருவல்—தருவேன்; சபதம்—உறுதிச்சொல்; புகரோனை—சுக்கிரனை (வெள்ளியை); அவன்—விசுவாமித்திரன்; பொருத்தினன்—(அரிச்சந்திரனேடு) சேர்த்தான்.

16. உள்ளிய—நினைத்த; இருத்தி—இருக்கச்செய்து; கவாது—பொறாது; கவண்சிலை—கவணில்வைத்தெறியுங்கல்; கொள்ளுதி—கொள்வாய்; என—என்று; ஒருவாய்மை—ஒரு சொல்; விளம்பலுற்றான்—சொன்னன்.

17. என்—என்றுசொல்; இசைந்தானுகில்—சம்மதித்தானனல்; சாற்றி—சொல்லி.

18. ஏக—போக; மூரி—பலம்; ஏகும்—செல்லுங்கள்; அவற்கினியார்—அந்த விசுவாமித்திரனுக் கினியவராயிருப்பவர்; எனக்கினியார்—எனக்கினிமையாயிருப்பவராவர்; பனி—குளிர்ச்சி; முனம்—முன்னம்; பைந்தொடி—பசியபொன்னலாகியவளையலணிந்தபெண் (சந்திரமதி); பாலன்—தேவதாசன்.

## மலர்—3.

## ஒட்டகமும் காகமும்.

1. துட்ட நண்பு—கெட்ட சிநேகம்; தொடங்கின்—செய்தால்; நட்டமெய்துவர்—நஷ்டம் அடைவர்; இலை—இல்லை; இட்ட—நட்பாக.

2. ஓதலும்—சொல்லலும்; என்னும்—என்று சொல்லப்படுகின்ற; உள—உள்ளன; வேங்கை—புலி; நண்ணுநாள்—கூடிவாழ்கின்ற காலத்தில்

3. உற்றிட—வர; கிட்டி—நெருங்கி; வாயசம்—காக்கை; ஆணை;—சத்தியம்; ஏகி—போய்.

4. அன்னவேந்தன்—அவ்வரசன்; அபயம்—பயமின்மை; இன்னல்—துன்பம்; மன்னி—பொருந்தி; வாழ்கென—வாழ்க + என.

5. சம்பு—நரி; கொடி—காக்கை; தம்புலத்தில்—தமது காட்டில்; இம்பர்—இவ்வுலகத்திலுள்ளவர்; போற்ற—துதிக்க.

6. கொடு—கொண்டு; விரைசெய்—வேகம்பொருந்திய; வேறிருந்து—தனியாகவிருந்து; இரை—ஆகாரம்; வேட்கை—விருப்பம்; அமைச்சர்—மந்திரிகள்; புரை—பழமை; புகலும்—சொல்லும்.

7. பொங்கும்—அதிகரிக்கும்; வெம்பசியேற்கு—கொடிய பசியையுடைய வெனக்கு; நல்குமின்—கொடுங்கள்; அடவி—காடு.

8. ஒன்றலான் — ஒன்றல்லாமல்; வம்மின்கள்—வாருங்கள்; கற்றபாடையின்—காகாவென்று தான்கற்றுப்பழகிய குறிப்புரையால்; சமுகம்—எதிரில்; குறுகி—நெருங்கி.

9. அருள்—கருணை; முன்னி—நினைத்து; மொழிய—சொல்ல.

10. யாது நுங்கருத்து—உமது எண்ணம் என்ன; கோதில்—குற்றமில்லாத; வேந்த—வேந்தனே; ஈது—இது; செவி—காது.

11. அடல்—வன்மை; ஆய—ஆராய்ந்தறிந்த; நவில்குவன்—சொல்லுவேன்; மாயவன்—கிருஷ்ணன்; வாய்மை—உண்மை.

12. துன்புறுவகை—துன்பமடையாத விதம்.

13. பஞ்சவர்—ஐவர் (தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்); இயம்ப—சொல்ல; நன்றிதென்று—நன்று + இது + என்று; நன்மகன்—அரவான் (அருச்சுனன் மகன்); களப்பலி—போர்க்களத்திலிடும் முதற்பலி; விளம்ப—சொல்ல.

14 அடைக்கலம்—புகலிடம்; புக்கதை—அடைந்த ஒட்டகத்தை; அதனல்—அவ்வொட்டகத்தினுரையால்.

15. உத்தரம்—விடை; நயந்த—விரும்பிய; நேடி—தேடி.

16. வருந்துற்றனன் — வருத்தமுற்றிருக்கின்றான்; ஒருமையாய்—ஒரு மனதாய்.

17. அருந்து—புசி.

18. கோமாயு—நரி; அவ்வாறு மறுத்திட—நின்னுடலுஞ் சிறிதென்று (அரசன்) கூற; எற்கு—எனக்கு.

19. கதனகன்—ஒட்டகம்; விதனம்—வேதனை; மாய்ந்தது—(ஒட்டை) இறந்தது.

20. எண்ணி—(ஒட்டகத்திறைப்புக்களை எடுத்து)எண்ணி; செந்நீர்—இரத்தம்; துங்கம்—உயர்வு; துய்த்திட—தின்ன; தசை—சதை; அயின்றது—உண்டது.

21. மடிவர்—இறப்பர்; திண்ணம்—நிச்சயம்; கொலையுண்ணல்—கொல்லப்படுதல்.

## மலர்—4.

### மனுநீதி கண்ட சோழன்.

1. நிலமகள்—பூமிதேவி; நுதல்திலகம்—நெற்றிப்பொட்டு;செம்பியர்—சோழர் (சிபிமரபிற்றோன்றியவர்);மலர்மகள்—இலக்குமி;சரசுவதியுமாம்; வண்டாமரை—வளப்பமுள்ள தாமரை; அலகில்—அளவு இல்லாத; சீர்—சிறப்பு.

2. தொன்னகர்—பழமையான நகர்; வெங்கதிரோன்—சூரியன்; வழி—வமிசம்; வழிமுதல்—(சூரிய)வமிசத்திற்கு முதல்வன்.

3. கொற்றவாழி—வெற்றியுள்ள ஆக்ஞாசக்கரம்; குவலயம்—பூமி; திறை—கப்பம்; கடை—கடைவாயிலின்; செற்றம்—கோபம்,

4. வழாமல்—தவறாமல்; புல்லி—தழுவி; மறங்கடிந்து—பாவத்தைப்போக்கி; போற்ற—துதிக்க; வையகம்—உலகம்; திருமணி—மிக்க அழகு; அரிக்குருளையன்னான்—இளஞ்சிங்கத்தை யொத்தவன்.

5. தொல்கலைகள்—பழமையான சாஸ்திரங்கள்; முற்றி—(படித்து)முடித்து; காதல்கூர—அன்புமிக; குணத்தானீடி—குணத்தால் + நீடி; குணத்தினோடு வளர்ந்து; பரிதி—சூரியன்.

6. திங்கள் வெண்கவிகை—சந்திரனைப்போன்ற வெண்(கொற்றக்) குடை; கோயில்—அரண்மனை; மங்குல்—மேகம்; கொங்கு—வாசனை; குவவு—திரண்ட; பொங்கிய தானை—மிகுந்த சேனை; போந்தான்—போயினான்.

7. பனிப்பில்—நடுங்குதலில்லாத; உண்மைப்பான்மை—உண்மைத்தன்மை; நல்லான்—நல்ல + ஆன்; நல்ல பசு;பனிற்றிளங்கன்று—மிக இளங்கன்று; மறுகின்—வீதியில்; ஊடு—(சேனை)யுள்.

8. மீது—தன் (கன்றின்) மீது; உம்பரினடைய—வானுலகஞ் செல்ல (இறக்க); அலமந்து—கலங்கி; வெம்பிடும்—வெதுப்படையும்; மெய்—உடல்.

9. பெற்றம்—பசு; செற்ற—அழித்தன; இழிந்து—இறங்கி.

10. மறை—வேதம்; நூல்—தருமசாஸ்திரம்; ஆற்றுவது—(பிராயச்சித்தம்) செய்வது; அறன்—தருமம்; இயற்றுவன்—செய்வேன்; திருமறையவர்—அந்தணர்.

11. உயிர்க்கன்று—உயிர்போன்றகன்று; வீய — இறக்க; ஆ—பசு, தரியாது—பொறுக்காது; நெருப்புயிர்த்து—நெருப்புப்பொறிசிந்த மூச்சுவிட்டு; விம்மி—பொருமி; மன்னுயிர்—பிறவுயிர்; மணி—ஆராய்ச்சிமணி;கோட்டினால்—கொம்பினால்; புடைத்தது—அடித்தது.

12. பழிப்பறை — பழியைக்கூறும்பறை; ஆர்க்கும் — சப்திக்கின்ற, மறலியூர்தி—யமன் வாகனமாகியகடா; தெழித்தெழும்—மிக ஒலித்தெழுந்த.

13. கேளா—கேட்டு; இதற்கு—இப்பசுவிற்கு; என் உற்றது என்று—யாது (துன்பம்) உண்டாயதென்று; அமைச்சரை—மந்திரிகளை; தாளிணை—இரண்டு பாதங்களையும்.

14. வளவ—சோழனே; அரசுலாம்—அரசர்கள் உலவுகின்ற.

15. அகத்து—மனத்தில்; இவ்வினை—இச்செயல்; செவ்விது—அழகிது; தெருமரும்—மனச்சுழற்சியடைவான்; தெளியும்—தெளிவடைவான்; தேறுன்—மீண்டும் மயங்குவான்.

16. இதற்கு — இப்பசுவதைக்கு; தீர்வன்று — பிராயச்சித்தம் ஆகாது; கொந்தலர்—பூங்கொத்து; தார்—மாலை; கோ—பசு.

17. மாநிலம்—பெரிய பூமி; காவலன்—அரசன்; பரிசனம்—தனது உத்தியோகஸ்தர்; ஊனம்—கெடுதி; பகைத்திறத்தால்—பகைவரது வல்லமையால்.

18. இருந்தவங்கள்—பெரிய பிராயச்சித்தங்கள்; நூற்றொடை—நூல்+தொடை; நூலின்நெறி; துடைப்புண்டது—அழிக்கப்பட்டது; வழக்கு—நீதி (தன்மை).

19. இதுவே—(என்மகனைக்கொல்லும்) இதுவே; இவ்வான்—இ + ஆன்; உறுபேரிடர்—மிக்கபெருந்துன்பம்; அனகன்—பாவமற்றவன்.

20. முரண்—வன்மை; ஊக்க—செலுத்திக்(கொல்லுக); ஆருயிர்—அருமையானவுயிர்; துறப்ப—விட்டுவிட; குலமகனை—சிறந்தமகனை.

21. மருமம்—மார்பு; அருமந்த—அருமருந்தன்ன.

22. தண்ணளி—தண்மை + அளி; பெருங்கருணை; வானவர்—தேவர்; சொரிந்தார்—பொழிந்தார்; அண்ணலவன்—பெருமையிற்சிறந்தவனாகிய அச்சோழனது; மழவிடை—இளமைபொருந்தியவிடபம்.

23. தனிக்கன்றும்—ஒப்பற்ற புதல்வனும்; பரிசு—தன்மை; முன்னவன்—யாவர்க்கும் முதல்வனாகிய சிவபெருமான்; பொருள்—காரியம்.

## மலர்—5.

### நளன் தூது செல்லல்.

1. உன்னுழை—உன்னிடத்தில்; கூறுதும் — சொல்லுவோம்; பெட்புறும்—விரும்பும்; பொன்னகர்க்கிறையவன்—இந்திரன்; மன்னவன்—நளன்.

2. குறிப்பு—மனக்குறிப்பு; ஈதல்—கொடுத்தல்; கொடை—

கொடுத்தல்; வழங்கல்—கொடுத்தல்; ஆவியும்—உயிரையும்; திறப்பட—நிச்சயமாக; இவருளம்—இவருடையமனம்.

3. இனையன—இத்தன்மையனவற்றை; வண்ணவான்குன்றென—அழகியபெரியமலைபோல; பணைத்து—பருத்து; குவவுத்தோளினன்—திரண்டதோளையுடையவன் (நளன்); வன்றிறல் வாசவன்—மிக்கவன்மையுடைய விந்திரன்; வதனம்—முகம்; கேட்டி—கேட்பாய்; உரைத்தன் மேயினன்—சொல்லத்தொடங்கினன்.

4. தொல்குலம்—பழையகுலம்; பான்மையால்—தன்மையால்; துறந்து—நீங்கி; போத—வர.

5. ஆங்கு—அவ்விடத்து; வானரசன்—இந்திரன்; பொற்பினல் வீங்கு—அழகினல் மிகுந்த; மாரனை—மன்மதனை; அவன்—அம்மன்மதன்; எய்யும்—செலுத்துகின்ற; இன்னறு—இன்+நறு; இனியதேன்; பூங்கணையால்—மலரம்பால்.

6. வெயில்விரி—ஒளிபரந்த; வீமனல்கிய—வீமராஜன் பெற்ற; மயிலியல்—மயில்போலுஞ்சாயல்; மதர்விழி—களிப்புமிக்க கண்கள்; மடந்தைபால்—தமயந்தியினிடத்து; செயிரறு—குற்றமற்ற; இரப்போரினும்—யாசிப்பவரினும்; உலைய—வருந்த.

7. கைப்படுநெல்லியங்கனியின்—உள்ளங்கையிற் பொருந்திய நெல்லிக்கனிபோல (த்தெளிவாக); துப்பிதழ்—பவளம்போன்றவுதடு; போகென—போக+என; எவன் கொல்—யாதுகாரணம்; எஞ்சிந்தை—எங்களுடைய (நளன் தமயந்தி) உள்ளம்; ஓர்ந்தும்—தெரிந்தும்.

8. வழங்கிய—சொல்லிய; மறுது—மறுக்காது; எனை—(நளனுகிய) என்னை; விழைந்த—விரும்பிய; தளிரியல்—தளிர்போலுந்தன்மையளாகிய தமயந்தி; வெள்குறுது—நாணுது; உள்ளங்குழைந்து—மனமிளகி.

9. இசைத்த—சொல்லிய; மெய்ப்பாதன்—சகுந்தலை புத்திரனுகிய பாதன்; நிகரில்பார்த்தன்—ஒப்பில்லாத கார்த்த வீரியார்ச்சுனன்; முன்னினும்—நினைத்தாலும்; முற்றும்—முடியும்; அன்ன—அத்தன்மை வாய்ந்த; ஏகில்—(தூதாகப்) போனல்.

10. இயம்புமெல்லையின்—சொல்லும் பொழுதில்; வனைமலர்க் கோதை—பூமாலையணிந்த கூந்தலையுடைய தமயந்தி; இழுக்குறு—தவறுதலடையாத; அலங்கல்—(வெற்றி) மாலை.

11. விட்புலம்—விண்ணுலகம் (தேவருலகம்); புரந்தருளும்—காக்கும்; நவின்று—கூறி; கட்புலனல்—கண்ணிந்திரியத்தால்; உருக்காண்கிலாதது—வடிவத்தை யறிதற்கு முடியாதது; விஞ்சையை—மந்திரத்தை (வித்தையை); நுவன்றிட்டான்—கூறினன்.

12. இணையடி—இரண்டுபாதங்கள்; இறைஞ்சி—வணங்கி; இமிர்—ஒலிக்கின்ற; நகரி—குண்டினபுரம்; நண்ணுவான்—அடைதற்கு; அறைகழல்—ஒலிக்கின்றவீரக்கழல்; இலங்குதாள்—பிரகாசிக்கின்றபாதம்.

13. பாண்—இசைப்பாட்டு; சேண்—ஆகாயம்; நிவந்த—உயர்ந்த; செய்குன்றும்—கட்டுமலையும்; மாணிழை—மாட்சிமை யமைந்த ஆபரணங்களையுடைய தமயந்தி; மாடம்—கன்னிமாடம்.

14. மின்னிடை—மின்போலுமிடையையுடைய; அரம்பையர் குழாத்துள்—தெய்வமகளிர் கூட்டத்துள்; மேவிய—பொருந்திய; அயிராணி—இந்திராணி; நுதல்—நெற்றி; நாப்பண்—நடுவில்; இன்னகைக் கன்னி—புன்சிரிப்பையுடைய தமயந்தி; வீற்றிருத்தல்—பெருமையாக விருத்தல்.

15. செய்ய—சிவந்த; கொழு—செழுமை; தடஞ்சினை—பருத்த கிளைகள்; பொதுளும்—நெருங்கியுள்ள; தரு—கற்பகவிருட்சம்; வைகலும்—நாடோறும்; கமலத்தோன்—பிரமன்.

16. எறுழ்வலி—மிக்கவன்மை; மடங்கலன்னான் — சிங்கத்தையொத்தவன் (நளன்); மின்னவிர்—ஒளிவிளங்குகின்ற; குலிசவேந்தன்-வச்சிராயுதத்தையுடைய விந்திரன்; புணர்ப்பின்—சம்பந்தத்தினின்றும்; சுணங்குபூத்து—தேமல் பரந்து; பொலிவுறு—விளங்குகின்ற; கன்னலஞ்சிலைவேள்—கரும்புவில்லேந்திய மன்மதன்; கதுவ—பற்றும்படி.

17. விரைகமழ்—வாசனை வீசுகின்ற; நறிய—நல்ல; தண்டார்—குளிர்ச்சி பொருந்தியமாலை; பாவை—பதுமை (பொம்மை) போன்ற தமயந்தி; ஆர்வம்—அன்பு; உருவெளி —உருவெளித்தோற்றம்; உவந்து—சந்தோஷித்து; அயர்வாள்—வருந்துவாள்; தெருளுற—தெளிவுபொருந்த; தெரிக்கற்பாலார்—உரைக்குந்தன்மையவர்.

18. அண்ணல்—பெருமையுடையவன் (நளன்); அணங்கு—தெய்வப்பெண்; தேறல்—தேன்; காதல் கூர —ஆசைமிக; பருகி—உண்டு.

19. அல்ல செய்தல்—(தூதிற்குரியன) ஆகாதனவற்றைச் செய்தல்; தோன்றல்—நளன்; மீட்ப—திருப்ப; பூம்போது—அழகியமலர்; நாண்—வெட்கம்.

20. மீதூர—அதிகரிக்க; நகை—ஒளி; பூண்—ஆபரணம்; கடி—காவல்; அமரன்—தேவன்; எழில்—அழகு; இயக்கன்—யக்ஷன்.

21. இருநிலத்து—பெரியபூமியில்; பைம்பொன் — பசியபொன்னாலாகியகழல்; சேவடி—சிவந்தபாதம்; பொருந்துநீரால்—பொருந்துந்தன்மையால்; தூவியஞ்சிறை-மிருதுவானஅழகியசிறகு; வனப்பு-அழகு;

22. கலைநிலா—கலைகளையுடைய சந்திரன்; போந்த—வந்த; சிலை வலாய்—விற்றொழிலில் வல்லவனே; புவனம்—நாடு; பொருளதாக—நற்பொருளதாக; நலனுறு—நன்மையமைந்த; புனிதமாயது—பரிசுத்தமானது.

23. கானமர்—வாசனை பொருந்திய; தேன்—வண்டு; தெரியல்—மலர்மாலை; வேய்ந்து—தரித்து; பானலம்—பால்+நலம்; தீஞ்சொல்—இனியசொல்; பைந்தொடி—பசியபொன்னாலாகிய வளைகளையுடையதமயந்தி; வதுவைவேட்டு—மணத்தை விருப்பி.

24. ஆர்கலி—கடல்; செந்தழற்கடவுள்—அக்கினிதேவன்; தருமன்—யமன்; மதன்பாழி—மன்மதபாணம்; மாழ்கி—மயங்கி; தெருமால்—சுழற்சி.

25. இன்னணம்—இவ்வண்ணம்; மாழாந்து—மயங்கி; திதலையார்ந்த—தேமல்நிறையப்பெற்ற; இயைவதே—சம்மதிப்பதே; காமன்—மன்மதன்.

26. மன்றல்—வாசனை; குழலாள்—கூந்தலையுடைய தமயந்தி; எருத்தங்கோட்டி—கழுத்தைவளைத்து (தலைகுனிந்து); மருங்கு—பக்கத்தில்; எதிர்மொழி—மறுமொழி.

27. வையகம்—பூவுலகம்; ஒருகோலோச்சி — தனிச்செங்கோல் செலுத்தி; வான்புகழ்—பெரும்புகழ்; அரி—செவ்வரிபரந்த; மதர்—களிப்பு; தையல்—தமயந்தி; நாமஞ்சாற்றினும்—பெயரைக்கூறினாலும்; ஆற்றாளாகி—பொறாதவளாகி; வீவதற்கு—இறப்பதற்கு.

28. இயம்புவான்—சொல்லுவான்; எரியின்—நெருப்பில்; பொன்றில்—இறந்தால்; வெங்கனலிதனை—அக்கினிதேவனை; புகன்ற—கூறிய வார்புனலில்-மிக்கநீரில்; உள்ளாருயிர்—உள+ஆர்+உயிர்; துன்றுசீர்—நெருங்கிய சிறப்பு; தோய்ந்ததாய்—கலந்ததாய்.

29. கனலிசான்றாய்—அக்கினிசாட்சியாய்; ஒன்றுமோ—கூடுமோ; ஒவ்வாது—ஒப்பாது; உதகமோடு-நீரோடு; சூழ்வினை—நினைத்தகாரியம்; முடிக்கலாமே—முடிக்கலாமோ(முடியாது).

30. பனிப்ப—(நீர்) சொரிய; பேதுறவு—கவலை; பெய்வளை—(அழகைப்) பெய்கின்றவளைகளையுடைய தமயந்தி; ஆதரம்—ஆசை.

31. ஆயமும்—தோழியர்கூட்டமும்; இரங்கல்-வருந்துவது; சூட்டன்னம்-சூடு+அன்னம்; சூடு-உச்சிக் கொண்டை; விசும்பு-ஆகாயம்; அவ்வுழி—அவ்விடத்து.

32. தாவி — இறகு; மையவாம் — மை+அவாம்; மேகங்கள் விரும்புகின்ற; வாள்—ஒளி; புலவுவைவேல்—புலால்நாற்றம் பொருந்திய கூரிய வேலாயுதம்.

33. மழை—குளிர்ச்சி; இகந்து—நீங்கி; மாற்றம்—சொல்; ஆற்றல்—விதத்தினல்; பரிதி—ஒளி; அகம்—மனம்; பகர்ந்தனன்—கூறினன்; குன்றிடேல்—வருந்தாதே; அறைந்தது—கூறியது.

34. அடையலர்—பகைவர்; செகுக்கும்—கொல்லும்; மவ்வல்—முல்லை; செவ்விதின்—செவ்வையாக (நன்ருக); தெரிவை—தமயந்தி; மாருக்கவ்வை—நீங்காத ஓசை; கரந்து— மறைந்து.

35. காரிகை—அழகுள்ளவள் (தமயந்தி); சூரி—வன்மை; நேரிழை—தொழில் முற்றிய ஆபரணங்களையுடைய தமயந்தி; நிகழ்ந்த—நடந்தகாரியங்கள்; சோர்வுருது—குறைவுபடாமல்.

## மலர்—6.

### பாம்பும் தவளைகளும்.

1. சத்துரு—பகை; முனம்—முன்பு; துத்தி—படப்புள்ளி; கருநாகம்—கரும்பாம்பு.

2. வழுத்து—கூறப்படுகின்ற; குலம்-கூட்டம்; முழுத்த—முழுதும்; முயங்கிய—கூடிவசிக்கின்ற; எழுத்தை—(தலை) விதியை.

3. கோலவரி—அழகிய கீற்றினை(யுடைய); நாலுவகைச்சேனை—தேர், யானை, குதிரை, காலாள்; நல்லமைச்சர்களும்—சிறந்தமந்திரிகளும்; சீலம்—முறை; சேவிக்க—வாசிக்க.

4. பவனி—ஊர்வலம்; இவண்—இவ்விடத்து.

5. இறை—அரசன்; போகி—பாம்பு; யோகி—யோகாப்பியாசம் செய்பவன்; அதுதர—அந்தத்தவளைகொடுக்க; இரை—ஆகாரம்.

6. சோபம்—துக்கம்; சோகமென்பது சோபமெனத்திரிந்தது; தூத-தூதனே; அடிமை—அடிமை(யாளாக).

7. சொல—சொல்ல; அவன்—அவ்வமைச்சன்; சினம்—கோபம்; புணி—பாம்பு; நம்மின நிகர்த்த—நமது ஜாதியை யொத்த.

8. அரவு—பாம்பு; தப்பற—தவறு நீங்க; தருவம்—கொடுப்போம்; சத்திபெற—சாமர்த்தியம்தோன்ற; எய்ப்பு—இளைப்பு.

9. தேறினன்—(மந்தவிடன்) தெளிந்தான்; சாறினன்—சென்ருன்; உனை—உன்னை.

10. இதஞ்சொல்லி—இனியசொற்களைக்கூறி; நுகர—தின்ன; அடங்கலும்—(ஒன்றையும் விடாமல்) முற்றும்; ஒவ்வாத—(இழிவில் தனக்கு எதுவும்) ஒப்பாகாத.

11. அவன்—அச்சாலபதன்; குந்தியவர்—சாலபதன்.

12. கூகையினம்—ஆந்தைக்கூட்டம்; குறும்—குறுகிய; சிரஞ்சீவி—இது ஒரு காகத்தின்பெயர்.

## மலர்—7.

### அரிச்சந்திரன் விலைப்படுதல்.

1. வாரண வாசி—காசி; நண்ணி—அடைந்து; வண்டுறை—வண் + துறை, வளப்பமுள்ள தீர்த்தத்துறையிலே; மேவி—அடுத்து; ஆரண நெறி—வேதவழி; மாதும்—சந்திரமதியும்; புதல்வனும்—தேவதாசனும் (லோகிதாசனும்); காரணத்தமைச்சன் — தன்னிமித்தமாக வருகின்ற மந்திரி (சத்தியகீர்த்தி).

2. உறுதீவினை—மிக்க கொடுஞ்செயல்; நினையா—நினைத்து; பொருமால்களிறு—போர்புரியும் பெரிய ஆண்யானை; புகரோன்—சுக்கிரன் (நட்சத்திரேசன்); வெகுளா—கோபித்து; முருகார்தொடை—வாசனை பொருந்தியமாலை; இன்றது—இன்று + அது, இன்றையதினம் அப்பொருளை; தருகென்று—தருக + என்று.

3. அதிர—(உடல்) நடுங்க; பெருகரவத்தொடு—மிக்க முழக்கத்தோடு; அழல் கட்புகர்—தீச்சிந்தும் கண்களையுடைய சுக்கிரன்; முதிர—முதிர்ச்சியாக (கொடுமையாக); சுடுகட்டுரை—கடுஞ்சொற்கள்; அச்சதுர்—அந்தவகை; எய்த்து—இளைத்து; துணைவிழி—இரண்டுகண்கள்; முத்துதிர—முத்துப்போல் நீர் சிந்த; எதிர் உத்தரம்—மறுமொழி.

4. கல்லென்றுயர் தோளாய்—மலையை யொத்ததென்று சொல்லும்படியான உயர்ந்த தோளையுடையவனே; கௌசிகன்—விசுவாமித்திரன்; இல்லென்பது முளதென்பதுங் கௌசிகனெண்ணுதலல்லால் யாமெண்ணுதல் தருமோ என இயைக்க; எல்லொன்று—ஒரு பகல்; அவதித்தினம்—கெடுவாகியநாள்; வில்—விற்றுவிடு; வித்தாகி—விதையாகி (காரணமாகி); உதித்தாள்—தோன்றிய சந்திரமதி.

5. தேமென்கனிவாயாள்—இனிய மெல்லிய கொவ்வைக் கனியையொத்தவாயை யுடைய சந்திரமதி; செப்ப—சொல்ல; செயல்—செய்யத்தக்க காரியம்; என்றெழ—என்று அரிச்சந்திரன் புறப்பட; வெள்ளி—சுக்கிரன்; தலைமிசை—தலைமேல்; குலமடவாள்—சந்திரமதி; பூமென்குழல்— பூவையணிந்த மெல்லிய கூந்தல்.

6. நாணஞ்செல மெள்ளச் செல வாய்மைதள்ள விரையச்செல என்று அந்வயப்படுத்தி நாணஞ்செலுத்துதலின் மெள்ளச் செல்ல ஆனல் வாய்மை முந்துதள்ளுதலின் வேகமாகச்செல்ல எனப்பொருள் கூறுக; உயரறிவு—மேலானபுத்தி; உரன்—வலிமை; அடையா—அடைத்து; இறை—அரசன் (அரிச்சந்திரன்).

7. மண்மின்னென—மண்ணிலேதோன்றும் மின்னலைப்போல; கொண்மின்—(விலைக்குக்) கொள்ளுங்கள்; கோமான்—அரசனுகிய அரிச்சந்திரன்; கேளா—கேட்டு; விண்மின்னென—மேகத்துத்தோன்றும்

மின்னலைப்போல; அலையும்—அசைகின்ற; புரி—முப்புரி; வெண்ணூலணிமார்பன்—வெள்ளிய பூணூலை யணிந்த அழகிய மார்பையுடைய அரிச்சந்திரன்; மறையோன்—காளகண்டன்; அதிகளவோடு—மிக்க வஞ்சக எண்ணத்தோடு.

8. பகர்—சொல்; மென் சொல்லியை—சந்திரமதியை; மன்—அரசன் (அரிச்சந்திரன்); சேயையும்— பிள்ளையையும்; மடமானையும்—இளமான்போன்ற சந்திரமதியையும்; விறல்—வெற்றி.

9. களபப்பீடர்மிசை—யானையின் கழுத்தின்மீது; கவணிற்படுசிலை—கவணினின்றுஞ்செல்லுகிறகல்; இருநிதி நல்கிடில்—பெரும் பொருள் கொடுத்தால்; தளவத்திருநகையாள்—முல்லையரும்பையொத்த அழகிய பல் வரிசையுடைய சந்திரமதி.

10. நிருபரும்—அரசரும்; அன்றன்று—அன்று அன்றைய தினம் (நாடோறும்); காண்டக—காண; ஏங்கினள்—அழுதாள்.

11. இடைவன்—வருந்துவான்; படர்—துன்பம்; நாயக—தலைவனே; அயல்—பக்கம்; தழீஇ—தழுவி; தூங்கி—தொங்கி; தோன்றல்—மகன் (தேவதாசன்); அரற்றினன்—அழுதான்.

12. காதலன்—மகன்; பற்று—பிடிப்பு; கட்பொறி—கண் + பொறி (பொறி—தீப்பொறி); வேதியன்—பிராமணன்; இல்லிடம்—வீட்டை.

13. அந்தணன்—பிராமணன் (சுக்கிரன்); மாநிதி—பெரிய செல்வம்; சிந்தையோடு—மனமார.

14. ஈந்தனை—கொடுத்தாய்; ஈகுவதென்—கொடுப்பதெவ்வளவு; வினை—கொடுஞ்செயல்; சல்லியன்—அம்புபோல் வருத்துபவன் (நட்சத்திரேசன்).

15. அன்னகாலை—அப்பொழுது; இவற்கு—இந்த நட்சத்திரேசனுக்கு; துணுக்கென—மனந்திடுக்கிட்டு.

16. ஆண்டகை—ஆளுந்தன்மையுடையவன் (அரசன்); அடி பூண்டனன்—பாதங்களைப் பற்றிக்கொண்டனன்.

17. ஒண்ணிலாவதனத்து—பிரகாசமுடைய சந்திரன்போன்ற முகத்தில்; மாழ்கவே—மழுங்கவே; புனல்—நீர்; நீர்மைக்கு—தன்மைக்கு; ஏற்குமதோ—தகுதியாமோ.

18. பலித்தது—நேர்ந்தது; ஆவணவீதிவாய்—கடைத்தெருவில்.

19. ஆதிநூலினர்—பிராமணர்; சாதியீனர்—சாதியிற்றாழ்ந்தவர் (சண்டாளர்); சால்பு—(குணங்கள்) நிறைவு; கோது—குற்றம்.

20. வாரமேதகு—உரிமைத்தன்மையிற் சிறந்த; தூரமேகேளா—தொலைவிலேயிருந்து கேட்டு; குரநீர்மை—கொடுமைத்தன்மை; புலைமகன்—பறையன்.

21. கா—தோட்சுமை; தூசொடுவாய்புதைத்து—துணியாலே வாய்மூடி; அமைக்கும் புன்றொழிலார்—இழிதொழிலைச் செய்பவர்.

22. புந்திவைத்து—ஆலோசித்து.

23. அவ்வயின் மேயினன்—அவ்விடத்து வந்தவனாகிய வீரவாகுவை (ப்பார்த்து); இயம்பினான்—சொன்னான்.

24. தருகுவேனென—தருவேனென்று புலையன்கூற; தன்பெயரால்—மந்திரியாகிய தன்பெயரால்; ஆவணம்—விலைச்சீட்டு; பொறித்தருளினன்—எழுதிக்கொடுத்தனன்; ஐய—ஐயனே, புகரை நோக்கி யமைச்சன் கூறியது; மகிழ்ந்து—சந்தோஷித்து; அவன் நட்சத்திரேசன்; ஏகினான்—போனான்.

25. வலையம்—தோளணி (வாகுவலையம்); நீத்த—போக்கிய; புயத்திடை—தோளில்; அலைய—அசைய; தொலைவிலா—நீங்காத; மூடை நாறிய—பலால் நாற்றமுடைய; குடில்—குடிசை; நண்ணினான்—அடைந்தான்.

26. பசுத்தசை—பசுவின் மாமிசம்; ஊத்தைக்கொட்டில்—அழுக்கடைந்தகொட்டில்; புவி—பூமி; காலன்—யமன் (வீரவாகு); கோவுடன்—அரசனுடன்.

27. தூங்கிருள்—மிகுந்த இருள்; கடியும்—கெடுக்கும்; சுடலை—சுடுகாடு; புலைப்பேருடை—புலையன் பெறுவது ஆடை; பணங்கால்—காற்பணம் (அரையணா); அட்டு—சமைத்து.

28. கொள்ளியாடை—கொள்ளிவஸ்திரம்; மயானம்—சுடலை.

## மலர்.—8.

### குசேலர் கிருஷ்ணனைப் பார்க்கப் புறப்படுதல்.

1. சுடிகை—உச்சிக்கொண்டை; பஃறலை—பல்+தலை, பலதலைகள்; அரவம்—பாம்பு; பொதிந்தாங்கு—மூடினாற்போல; இமைக்கும்—விளங்கும்; சமழ்ப்ப—குறைய; மால்வரை—பெரியமலை; செறிய—நெருங்க; சேரி—சிற்றூர், சேர்ந்திருக்குமிடம்.

2. பாங்கு—அழகு; மதி—சந்திரன்; வண்டர்—வண்டு; பாண்—இசை, பாட்டு; நறா—தேன்; கொழிக்கும்—சிந்தும்; பொறி—இலக்குமி; இலகும்—விளங்கும்; பொருப்பன—பொறுப்பு+அன்ன, மலையையொத்த; மால்—திருமால்; பதம்—திருவடி; பொறிகள்—இந்திரியங்கள்; மெய், வாய், கண், மூக்கு, செவி.

3. மெத்திய—மென்மையான; இயைத்து—சேர்த்து; பொல்லம்—துவாரம்; பொத்திய—தைத்த; சிதரே—கந்தலே; மதக்கலுழி—மதப்

பெருக்கு; கரடம்—மதம் பாய் சுவடு; தறுகண்—அஞ்சாமை; தரியலர்—பகைவர்; கூற்று—யமன்.

4. திறலியை—வன்மை பொருந்திய; திகழ்ந்திடும்—விளங்கிடும்; உறலியை—பயனுண்டாதல் பொருந்திய; செய்பாக்கு—செய்ய, பாக்கு வினை யெச்சவிகுதி; அறலியை—கருமணலை யொத்த; கதுப்பினாள்—கூந்தலையுடையவள்; அணங்கு—பெண்; மறல்—வன்மை; சென்னி—தலை; தாளோய்—பாதத்தையுடையவனே.

5. மாசிலா—களங்கமில்லாத; உவப்ப—களிக்க; கொண்கன்—கணவன்; ஒழுகுநீராள்—நடக்குங்குணமுடையவள்; தேசுறு—புகழ் மிகுந்த; வாய்மை—உண்மை.

6. மலையிட்ட—மலைபோன்ற; மகவு—புதல்வன்; அலையிட்ட—நீரிலுண்டாகிய; முட்டாள்—முள்+தாள், முட்களையுடைய கொடி; செய்யவம்புயத்துறைவோன்—செந்தாமரை மலரில் வசிப்பவன் (பிரமன்); ஓரேழ் தலையிட்ட விருபான்—இருபத்தேழு; சிலையிட்ட தழும்பு வாய்ந்த—வில்லைத்தாங்கின வடுவமைந்த; தெரியல்—பூமாலை; அம்—அழகிய; தடம்—விசாலம்.

7. பருவரல்—துன்பம்; துணைக்கரம்—இரண்டு கைகள்; மல்—(குடிப்பிறப்பின்) மேன்மை; வீட்டி—அழித்து; இல்—வீடு; எந்நாளும்—எந்த நாளும்.

8. இரு நிலத்து—பெரிய பூமியில்; யாவர்கண்ணும்—எல்லாரிடத்தும்; ஒருவிய—நீக்கிய; நீவாரப்புல்—புல்வகையிலொன்று.

9. மெல்லியல்—மென்மைத்தன்மையுடையவள் (சுசீலை); பாகம்—சமையல்; அதிதி—விருந்தினர்; அயின்று—உண்டு; தவலரும்—குற்றமற்ற; உவகை மகிழ்ச்சி; மறை—வேதம்.

10. இற்று—இத்தன்மைத்து; மட்குழிசி—மண்ணாலாகியபாத்திரம்; கோரிகை—அகப்பை.

11. பொருமி—விம்மி; வீழா—வீழ்ந்து.

12. கலாம்—கலகம்; நனி—நன்றாக; செவ்வண்ணம்—செந்நிறம்; கரதலம்—கை; வெரிந் புறம்—முதுகுபக்கம்; தைவந்து—தடவி; ஆம்பல்—குமுதமலர்.

13. புண்டரிகம்—தாமரை; கரை—சொல்லும்; எண்டப—(நாள்) எண்ணிக்கை கீடக்க.

14. நண்புகூர்—விருப்பம் மிகுந்த; பண்பு—அன்பு; தனையர்—மக்கள்; கண்புகா—கண்காணுதற்கரிய; கவற்சி—கவலை; எண்புகா—அளவுபடாத; இகத்தல்—நீக்குதல்.

15. மடவார்—பெண்கள்; பொற்பு—அழகு; மிடி—வறுமை; சாகரம்—கடல்; அமயம்—சமயம்.

16. வனப்பினை—அழகினை; சாற்றரும் — சொல்லுதற்கரிய; உலோபம்—ஈகையின்மை; யாதவர்—ட் தமரபினர்; இணையில்—ஒப்பில்லாத; கலை—சாஸ்திரம்; வாய்மடுத்தனை—உண்டனை.

17. பீதாம்பரன் — பொன்னுடையுடையவன் (கிருஷ்ணன்); மருங்கில்—பக்கத்தில்; செல்லநோய்—வறுமைப்பிணி.

18. துளவமாலிகை—துளசிமாலை; நிறத்தில்—மார்பில்; கமலை—இலக்குமி; மண்ணிய—கழுவிய; மாசு—குற்றம்; நஞ்சிறார்—நமது சிறுவர்; உய—உய்ய, பிழைக்க.

19. கருப்பையண்டத்துயிர்க்கும்—கருப்பையுயிர்க்கும், அண்டத்துயிர்க்கும், கருப்பை—கருப்பப்பை, அண்டம்—முட்டை; புனத்துழாய்க்கண்ணி—கொல்லைக்காட்டுத் துளசிமாலை; ஒல்லும்—பொருந்தும்; எண்ணல்—எண்ணுதே.

20. செருக்கு—கர்வம்; மூகர்—ஊமையர்; பறியணி—பொன்னுபரணம்; பயிறறு—பயிறு+அறு—ஓசையற்ற; குறிபெறு—ஆராய்ந்தறிதல்பெற்ற.

21. மதலை—மக்கள்; விதலை—நடுக்கம்; வியன்பருவம்—யௌவனவயது; கதம்—கோபம்; காலர்—யமதூதர்; இதமுறல்—நன்மையடைதல்; சேய்—மக்கள்.

22. மற்ற—மற்றவற்றை; ஏற்குமா(று)—பொருந்தும் விதம்; நாற்கதி—நால்வகைப்பிறப்பு, தேவர், மக்கள், விலங்கு, தாவரம்; சேல்—மீனினத்திலொன்று.

23. மாற்றம்—சொல்; நந்தல்—கெடுதல்; புந்தி—புத்தி.

24. கராவான்—முதலையால்; மொய்வலி—மிக்கவன்மை; கறையடி—உரல்போலுங்கால்; கயம்—யானை; பொன்னன் இரணியன்.

25. வெண்டிரை—வெண்மை+திரை, வெள்ளிய அலை; மண்டிய—நெருங்கிய; புரப்பன்—காப்பன்; அண்டர்கள்—தேவர்கள்; ஐய—ஐயனே; உயிர்த்த—பெற்ற;பண்டை—பழமை;பகரும்—கூறும்.

26. இடம்பாடிலாமை—பொருளில்லாமை (யால்); சாம்பி—வாடி; தேமொழிக்கு—தேன்போலுமினிய சொல்லையுடையசுசீலைக்கு; வாய்மை—உண்மை; சான்றோன்—(குணங்களால்) நிறைந்தவன்,குசேலன்; உடம்பாடு—சம்மதம்.

27. கண்ணுறின்—தரிசித்தால்; கண்ணுங்கதியு நன்கு, கதியும் நன்கு கண்ணும்—மோட்சமும் நன்றாகவுண்டாகும்; நண்ணும்—

பொருந்தும்; உளனையும்—மனம் வருந்தும்; இன்னாள்—இவளது, சுசீலையது; எண்ணு(ம்)—எண்ணமும்; ஒண்ணும்—பொருந்தும்.

28. யாதினைக்கருதி—எப்பொருளைக்கருதி; கன்றுமாறு—வருந்தும்படி; நவிற்றுவர்—கூறுவர்; மன்ற—நிச்சயமாக; சிறுமை—அவமானம்; பாவாய்—பாவைபோன்றவளே, பாவை—பொம்மை.

29. பந்தம்—சம்சாரக்கட்டு; பரம்பொருள்—மேலாய பொருள், கடவுள்; சந்தம்—அழகு; கையுறை—காணிக்கை; படர்குவன்—செல்வேன்.

30. கொழுனன்—கணவன், குசேலன்; உபவாசம்—பட்டினி; நலக்க—நன்றாக; துன்றிய—பொருந்திய; அறலில்—நீரில்; தூய்தா—பரிசுத்தமாக.

31. கறையிட்டு—உரலிலிட்டு; கரிசு—குற்றம், உமிமுதலியன; நேடி—தேடி; சிறை—அடிமை; பவம்—பிறப்பு; வழிகண்டோன்—குசலேன்.

## மலர்—9.

## கஜேந்திரமோட்சம்.

1. சீருறுகலசம்—பெருமை பொருந்திய அண்டகோளம்; அப்பிற்றிடர்—சமுத்திரத்தால் சூழப்பட்டுள்ள பூமி; மேரு—மேரு வென்னும்மலை; தேவர் தொகையினுயிரம்—முப்பத்துமூவாயிரம்; காரணமாயிருக்குஞ்சிலை—(தான் தாங்குதலின் உலகத்திற்கு) ஆதாரமாயிருக்கும் (மேரு) மலை; கனக நேராம்—பொன்மயமாம்.

2. அந்நிலை—அம்மேருமலை(யில்); புரிந்து—செய்து; உன்னிய—நினைத்த; மாயோன்—திருமால்; உகந்து—சந்தோஷித்து; கியாதிக்கேசரர்—புகழ்பெற்ற வித்தியாதரர், கேசரர்—ஆகாயத்திற் சஞ்சரிப்பவர்.

3. ஆர்ப்பு—ஓசை; சாயும்—பெருகிக் கீழேவிழும்; சலதி—கடல், இங்கே அருவிக்காயிற்று; தாரு தரு—மரந்தருகின்ற; சால—மிகவும்; கலை—வேதசாஸ்திரமுதலிய நூல்கள்; நிகழ்த்துதற்கு—சொல்லுதற்கு.

4. கன்னலை—கரும்பை; கதலியின்—வாழையின்; நெலை—நெல்லை; செறி—நெருங்கிய; அந்நிலையானை—முறித்து, மென்று, கனியைத் தின்று, நெல்லைப் புசித்து, விளங்கனியைக்கொள்ளும் அத்தன்மையையுடைய யானை; கரிணி—பெண்யானை.

5. அல்லல்—துன்பம்; அத்தந்தி—அந்தயானை; தொல்லைநாள்—முற்காலம்

6. பங்கயப்பொய்கைதன்னை — தாமரைத் தடாகத்தை; பரிவாய்—பிரியமாய்; கோடி அங்கயக்கரிணியோடு—கோடியளவினவாய அழகிய பெண்யானைகளுடன்; அவ்வாரியின்—அத்தடாகத்தில்; அங்கம்

—உடம்பு; தோய்ந்து—மூழ்கி; பொங்கமாய்—சந்தோஷமாய்; தும்பி ராஜன்—கஜேந்திரன் (தும்பி—தும்பிக்கையுடையது); கொய்யுங்காலை —பறிக்குங்காலத்தில்.

7. முன் பொரு சாபத்தால்:—ஊகூவென்பானொருவன் நீரில் தன்னைக்கரந்து, அங்குமூழ்கு மொரு முனிவ (தேவல)ரது காலைப் பற்றி யீர்த்தமையின் அவனை அம்முனிவர் முதலையாகவே சபித்துப் போனார். இஃது ஊகூ முதலையாயினகதை.

8. பின்வருங்காலை—பின்னங்காலை; நாடி—பார்த்து; வன்—வலிய, காவும்—முதலையும்; மீண்டும்—மறுபடியும்; முன்றாளை—முன்னங் காலை; கிட்டி—நெருங்கி.

9. பாரிய—பருத்த; மொத்திட—மோதியடிக்க; எய்தி—அடைந்து, வெகுண்டு—கோபித்து; போர்—சண்டை.

10. வெருவி—பயந்து; நாதன்—தலைவன் (கஜேந்திரன்); பாடு —வருத்தம்.

11. ஆளன்—கணவன்; அத்தியின்குழாங்கள்—யானைக் கூட் டங்கள்; தயங்கியே—மயங்கியே; இன்னே—இப்பொழுதே; ஈர்க்குங் காலை—இழுக்கும்பொழுது.

12. கரையின்வாய்—கரையினிடத்து; வரை—மலை; மற்பொரு வதுபோல்—மல்யுத்தம் செய்வதுபோல்; தாக்கி—அடித்து; தசைகள்— மாமிசங்கள்.

13. குஞ்சரம்—யானை; பூருவத்துள—முற்காலத்திருந்த; வினை —தீவினை; திக்கு—உதவிசெய்பவர்; சருவேசனை—கடவுளை; ஏகருணத் திஞலே—ஒரு மனத்திஞலே.

14. அநாதி—உற்பத்தியில்லாத; சொரூபம்—ஞானவடிவம், சுருதி—வேதம்; வீறும்—பெருமை பொருந்திய.

15. புண்டரீகமும்—கஜேந்திரனும்; ஏத்தி—துதித்து; வாதனை —துன்பம்; அவ்வுமுவ்வுடன் மவ்வுமாகிய ஆதியே—ஓம் என்னும் பிரணவப்பொருளாகிய முதற்பொருளே.

16. அந்தரம்—ஆகாயம்; எந்தனை—என்னை.

17. இடிநகர்—இடியையொத்த; கரம்—துதிக்கை; எக்கம்— வருத்தம்; படிவம்—உடம்பு; பரிவு—துன்பம்; அரற்றும்—கதறும்; அனல்—தீ; அப்பு—நீர்; கால்—காற்று; வெளி—ஆகாயம்; பூ—பூமி; மும்மூர்த்தி—பிரம, விஷ்ணு, உருத்திரர்; அடிகள்—சுவாமிகள்.

18. திருவை—இலட்சுமியை; பணிமுடி—ஆதிசேடனது படம்; இங்கிதம்—அழகு; இபம்—யானை; பாதசாரியாய்—காலால்நடப்பவனாய்;

கங்கையைப் பெற்றபாதம்:—யாகஞ்செய்துகொண்டிருந்த மகாபலிச் சக்கிரவர்த்தியினிடம் மூவடிமண் பெற்றபின், வாமனனுயிருந்த திருமால் திரிவிக்கிரமவடிவினையெடுத்துக் கொண்டு மேலுலக மெல்லாவற்றையும் அளப்பதற்குத் தன் ஒரு பாதத்தைத் தூக்கினுர். அப்பாதம் பிரமனுலகத்தைக்கடக்கும் பொழுது பிரமன் அதனைக்கண்டு தன் கமண்டல நீரினுல் அதனைப்பூசித்தான். அந்நீரே ஆகாயகங்கை ஆயது. இது திருமால்பாதம்கங்கையைப்பெற்றவரலாறு. கடுகி—விரைந்து.

19. புனல்—நீர் (தடாகம்); மேவு—பொருந்தியிருக்கின்ற; செங்கதிர்த்திரள்—சூரியனது செம்மையாகிய கிரணங்கள்; தேசு—ஒளி; திகிரி—சக்கரம்; மங்கை—இலட்சுமி; கரையின்வாய்—அப்பொய்கைக் கரையினிடத்து.

20. மண்டலம்—பூமி; மாதிரங்களும்—திசைகளும்; விண்டலங்கள்—விண்ணுலகங்கள்; குண்டலம்—குழை (காதணி); துளங்கிட—அசைந்திட; கும்பியை—யானையை; அரி—திருமால்; ஆழி—சக்கரம்.

21. மாள—இறக்க; காரியமுடிக்க—(முதலையைக் கொல்வதாகிய)காரியத்தைச் செய்ய; சீரிய—பெருமைபொருந்திய.

22. மலர்க்கை—செந்தாமரை மலர்போலுங்கை.

23. அடைவுடன்—மனப்பொருத்தத்தோடு; புளகம்—மயிர்சிலிர்த்தல்; உருவினை—அரச வடிவத்தை.

24. கழற்றுகள்—பாததூளி; அகலிகை நல்லுருப் பெற்றவரலாற்றை 38வது பக்கத்திற்காண்க; விடங்கர்—முதலை; மடங்க—அடங்க; தொல்லுரு—பழையயானைவடிவம் (தான் முன் போல் அரசனுனமையின் யானையுருவம் தொல்லுருவமாயது.)

முன் இந்திரத்துய்மன் என்னுமரசன் ஒருவனிருந்தான். ஒருநாள் அகத்தியமாமுனிவர் அவனைக்காணவந்த காலத்து அவன் செருக்குற்று அவருக் கேற்ற உபசாரங்களைச் செய்யாதொழிந்தான். முனிவர்வெகுண்டு அவனையானையாகச் சபித்தனர். அருளுடையவராகலின் அவர், அவன்வேண்ட, திருமால்மீதன்பு செலுத்து முள்ளத்தினையளித்தார். இஃது இந்திரத்துய்மன் யானையாகவிழிந்த வரலாறு.

25. இறைஞ்சி—வணங்கி; அறந்திருநாதன்—தருமத்திற்கும் இலட்சுமிக்கும் நாயகன்; நிறம்—வடிவம்.

26. சாற்றுவேன்—சொல்லுவேன்; அம்புயம்—தாமரை; பத்தி—அன்பு; ஞானமுத்தி—முற்றி முத்தியெனத்திரிந்தது; சித்தியாகும்—கிடைக்கும்.

84628

முதலியார் அவர்கள் அன்புடன் இசைந்துளர். அவர்கள் வெள்ளியன்று மாலை நமது பள்ளிக்கு நான்கு மணிக்கு வருவர். உடனே அவர்கட்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; பின்னர், புகைப்படம் எடுக்கப்படும்.

மாணவரை அணி அணியாக மண்டபத்தில் அமரச் செய்ய ஆறும் அமைப்பு மாணவத் தொண்டர் இருபதின்மர் இருக்கின்றனர். அவர்கள் அமைதி நிலவச் செய்வர். தமிழ்க் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற பதின்மருக்கும் உரிய நூல்கள் வாங்கி வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பரிசு பெற்றவர் பெயர், அமைப்பு, பரிசு மதிப்பு (முதற் பரிசு, இரண்டாம் பரிசு என்பவற்றுள் ஒன்று) இவை குறிக்கப்பட்டுள. அவற்றில் தங்கள் கையெழுத்திட வேண்டுகிறேன்.

கூட்டத் தொடக்கத்தில் ஆறும் அமைப்பு மாணவன் தமிழரசன், கடவுள் வாழ்த்துப் பாடுவான். ஐந்தாம் அமைப்பு மாணவன் கலைச்செல்வன், தமிழ்த் தாய் வணக்கம் பாடுவான். இருவரும் நம்மூர்த் தமிழிசைச் சங்கத்தில் இசைப் பயிற்சி பெறுபவர்; நன்றாய்ப் பாடுவர். கூட்ட இறுதியில், கழகச் செயலாளன் என்னும் முறையில் நான் 'நன்றி' கூறுவேன். தாங்கள் தலைவரையும் பரிசு வழங்குபவரையும் கூட்டத்திற்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டுகிறேன்.

நான் இன்று பள்ளியில் விடுமுறை பெற்று அயலூர்க்குச் சென்று இரண்டு நாட்களில் வருவேன். நான் இன்னும் செய்யவேண்டுவன எவையேனும்

இருப்பின், அன்புகூர்ந்து அறிவிக்கவேண்டுகிறேன் நான் வியாழனன்று காலையில் தங்களைச் சந்திப்பேன்

தங்கள் அன்புள்ள மாணவன்

சு. இளஞ்செழியன்.

கழகச் செயலாளன்

உயர்திரு. தலைமையாசிரியர் அவர்கள்,
நாட்டாண்மை உயர்நிலைப் பள்ளி,
பெரம்பலூர்.
(திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

## 4. (i) பொதுக்கூட்ட அழைப்பிதழ் :—

சென்னை, இராயபுரம்—நார்த்விக் மகளிர்
உயர் நிலைப்பள்ளி மாணவிகள் கழகம்

அன்புடையீர்,

எங்கள் மாணவிகள் கழகச்சார்பில் நாளை வியாழனன்று (29—9—'49) மாலை 4 மணிக்குப் பள்ளிக் கூட மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடும். அப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை "பெண்களும் தமிழ்த்தொண்டும்" என்பது பற்றிப் பேசுவார்கள். எல்லா மாணவிகளும் வந்து கேட்டு இன்புறுமாறு வேண்டுகிறேன்.

க. அன்பழகி.

கழகச் செயலாளர்.

## (ii) இளங்கோ மன்றம், தில்லை.

## இலக்கியச் சொற்பொழிவுகள்

அன்புடையீர்,

நமது இளங்கோ மன்றக் கட்டிட மண்டபத்தில் நாளை சனி, ஞாயிறு, திங்கள் (15, 16, 17—10—'49) மாலை 5 மணிக்குச் சென்னை-கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. பூ. ஆலால சுந்தரனுர் எம். ஏ., அவர்கள்,

1. திருக்குறள்—தமிழ்ப் பொதுமறை
2. சங்ககாலத் தமிழகம்
3. தமிழ் வளர்ச்சிக்குரிய வழிகள்

என்னும் பொருள்கள் பற்றிப் பேசுவார்கள். தமிழ் அறிஞர் வந்து கேட்டுப் பயன் எய்துமாறு வேண்டுகிரேம்.

இளங்கோ மன்றம்,
தில்லை

க. வேல்முருகன்.
மன்றச் செயலாளன்.

## (iii) கம்பர் கழகம்

## ஓர் அவசரப் பொதுக்கூட்டம்

அன்புடையீர்,

தென் ஆப்பிரிக்காவிலிருந்து தமிழ்ப் பேரறிஞர் —திரு. மயில்வாகனனுர் சென்னை வந்துள்ளார். நமது கழக வளர்ச்சிக்குரிய வழி வகைகளையும் கம்பரைப் பற்றிய ஆராய்ச்சியுரையையும் அவர்பால் கேட்க அவசரக் கூட்டம் கூட்டப்படுகிறது. நாளை புதனன்று (30—10—'49) இரவு 8 மணிமுதல் 10 வரை அவர் பேசுவார். கழக வுறுப்பினரும் தமிழறிஞரும் தவருது வர வேண்டுகிறேன்.

**இடம்:—ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மண்டபம், சைதாப்பேட்டை**

15, பால்வண்ணர் தெரு, சைதாப்பேட்டை.

**பா. தாமரைக்கண்ணன்,**
செயலாளன்.

## (iv) மாணவர் கழக ஆண்டுவிழா

**அன்புடையீர்,**

**நமது விழுப்புரம் உயர்நிலைப் பள்ளி, தமிழ் மாணவர் கழக ஆண்டுவிழா நாளை வெள்ளியன்று (3—4—'49) பிற்பகல் 4 மணிக்கு நமது பள்ளி மண்டபத்தில் நடைபெறும். அப்பொழுது நமது மாகாண முன்னாள் முதலமைச்சர், உயர்திரு. ஓ. பி. இராமசுவாமி இரெட்டியார் அவர்கள் தலைமை தாங்குவார்கள். அறிஞர் இருவர் சொற்பொழிவாற்றுவர். அனைவரும் வந்து விழாவினைச் சிறப்புற நடத்தித் தருமாறு வேண்டுகிறேன்.**

நகராண்மைக் கழக
உயர் நிலைப்பள்ளி,
விழுப்புரம்

**மதியழகன்**
செயலாளன்.

பேசுவோர் :—

1. புலவர் துரைவேலனார்—" நமது தமிழக வளர்ச்சி "
2. புலவர் பொன்னேதுவார்—" தமிழகத்தின் எதிர்கால வாழ்வு "

## 5. கூட்ட அறிக்கை

பள்ளித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடை பெறும் ஒவ்வொரு கூட்டத்தில் நடக்கும் நிகழ்ச்சி களையும் செயலாளர் சுருக்கமாய் எழுதிவைத்து, அடுத்த கூட்ட முதலில் படித்துக் காட்டுதல் வழக்கம். இவ்வாறு படித்துக்காட்டும் பொருள் 'அறிக்கை' எனப்படும். கமலநாதன் என்னும் ஆரும் அமைப்பு மாணவன் தன் பள்ளித் தமிழ் மாணவர் கழகச் செயலாளனுவன். அவன் வரைந்துள்ள அறிக்கை ஒன்று இங்குத் தரப்படுகிறது. இதுபோன்ற அறிக்கைகளை வரையப் பிள்ளைகள் பழகுதல் வேண்டும்.

### கமலநாதன் தயாரித்த அறிக்கை

### தமிழ் மாணவர் கழகம்

நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி, வேலூர்.

இக்கழகச் சார்பில் சென்ற ஆகஸ்ட் திங்கள் 15-ஆம் நாள் மாலை 4 மணிக்குக் கழக இரண்டாம் கூட்டம், பள்ளித் தலைமை யாசிரியர்-உயர்திரு. தெய்வசிகாமணி முதலியார், பி. ஏ., எல். டி. அவர் கள் தலைமையில் கூடியது. மாணவர்கள் மயிலை நாதன், பரிமேலழகன் என்பவர்கள் முறையே கடவுள் வாழ்த்தும் தமிழ்த்தாய் வணக்கமும் பாடினர். பின்னர்க் கழகச் செயலாளர் சென்ற முதற்கூட்ட அறிக்கையைப் படித்துக் காட்டினுர். தலைவர் மாணவர் கழகத்தின் தேவையைப்பற்றி முன்னுரை யாகப் பேசினுர். பிறகு மாணவர் மயிலைநாதன் என்பவர், "மாணவர் பொதுநலத்தொண்டு" என்

பது பற்றிப் பேசினர். முதியோர்க்குக் கல்வி வழங்கல், ஓய்வு நாட்களில் சேரி மக்கட்கு எழுத்தறிவித்தல், உடல்நல வழிகளைப் புகட்டல், விழாக்காலங்களில் பொது மக்கட்குச் சாரண இயக்கத்திற் சேர்ந்து உதவி புரிதல் போன்ற துறைகளில் மாணவர்கள் பொதுநலத் தொண்டு செய்யலாம் என்று பேசினர். தலைவர் தமது முடிவுரையில் பேச்சாளர் கூற்றுக்களை மனமாரப் பாராட்டி, 'அத்தகைய துறைகளில் நீங்கள் தொண்டுசெய்வீர்களாயின், நமது சமூகம் விரைவில் முன்னேற்றம் பெறும்' என்று கூறினர். பின்னர்க் கழகச் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

செப்டம்பர், 15, 1949. } க. வெற்றிவேலன்
செயலாளன்.

## 6. தீர்மானங்களை அனுப்புதல்

நேற்று மாயூரம் உயர்நிலைப்பள்ளி மண்டபத்திற் கூடிய தஞ்சை மாவட்டத் தமிழ் மாணவர் மாநாட்டிற்கு டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், எம். ஏ., பி. எச். டி. அவர்கள் தலைமை தாங்கினர்கள். அவ்வமயம்—" உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் விடுமுறை நாட்களில் தங்கள் ஊரைச் சுற்றியுள்ள சிற்றூர்கட்குச் சென்று சிற்றூர் மக்கட்குக் கல்வியின் தேவை, சுகாதார அவசியம், உலகச் செய்திகள், தமிழ் நாட்டு வரலாறு, பயிர்த்தொழில், கிராமக் கைத்தொழில்கள் முதலிய இன்றியமையாத பொருள்களைப் பற்றிச் சொற்பொழிவாற்ற வேண்டும். இத்தொண்டு தமிழ் மாணவர் செய்யத் தகும் பெருந்

தொண்டாகும். ஒரு கிராமத்திற்கு மாணவர் அறுவர் வீதம் செல்லுதல் நல்லது. இது தஞ்சை மாவட்ட மாணவர் மாநாட்டுத் தீர்மானம் ஆகும்,'' என்னும் ஒரு தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டுச் செயலாளர் மறுநாள் அத்தீர்மானத்தைப் பல படிகள் எடுத்து எல்லாச் செய்தித்தாள்களுக்கும் அனுப்பினர். தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லாப் பள்ளித் தமிழ்க் கழகச் செயலாளர்க்கும் அனுப்பினர். மாநாட்டு நோட்டுப்புத்தகத்திலும் தீர்மானம் பதிவு செய்யப்பட்டது.

பிள்ளைகளே, இத்தகைய பல தீர்மானங்களைத் தயாரித்தல், அவற்றைக் கூட்டங்களிலோ, மாநாடுகளிலோ படித்து விளக்குதல், அவற்றைச் செய்தித்தாள்கட்கும் பிற இடங்கட்கும் அனுப்புதல் என்னும் இத்துறைகளில் நீங்கள் நன்கு பயிற்சி பெறுதல் வேண்டும். தமிழன்னை உங்களை வாழ்த்துவாளாக !

### பயிற்சி

கீழ்வரும் பொருள்கள் பற்றிக் கடிதங்கள்—அழைப்பிதழ்கள் முதலியன வரைக :—

1. வரலாறு, கைத்தொழில், கணிதம் இவற்றுள் ஒன்றை விருப்ப பாடமாக எடுத்தமைக்குரிய விளக்கம்.

2. உங்கள் ஊரில் உள்ள வேறொரு தமிழ்க்கழக விழாவில் கலந்து தொண்டாற்ற வருவதைக் குறிப்பிடும் கடிதம்.

3. ஊரில் நடக்கும் 'முதியோர் கல்வி மாநாடு' ஒன்றிற் கலந்துகொண்டு தொண்டாற்ற விரும்பும் தமிழ் மாணவர் வரையும் கடிதம்.

4. பெற்றோரை இழந்த ஏழை மாணவன் படிக்க விரும்பித் தன் ஊர்ச் செல்வர் ஒருவருக்கு எழுதும் கடிதம்.

5. உனது கழக ஆண்டுவிழாவுக்குரிய முன்னேற்பாடுகள் செய்வதுபற்றிக் கழகத் தலைவருக்கு ஒரு கடிதம்.

6. உங்கள் மாணவர் கழகப் பொதுக்கூட்ட அழைப்பிதழ்.

7. மாணவர் கழகச் சார்பில் அவசரக்கூட்ட அழைப்பிதழ்.

8. மாணவர் கழக அல்லது இளைஞர் கழக ஆண்டுவிழா அழைப்பிதழ்.

9. மாணவர் கழக முன் கூட்டத்து அறிக்கை ஒன்றை எழுதுக.

10. மாணவர் சங்கக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களைச் செய்தித் தாள்களுக்கு எழுதி அனுப்புக.

ஆவணக்காப்பக
சென்னை-600 008.
135825
J3
P31(9)
N51

SENTHAMIL ILAKKANAMUM KATTURAIYUM

BOOK IV—FORM IV

BY

Pulavar S. ARUMUGA MUDALIAR, M.A., B.O.L., L.T.

THE NATIONAL PUBLISHING CO.

6, KONDI CHETTY STREET, MADRAS-1

*Copyright*] 1951 [*As.* 15